Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JANUARY 25, 2023

புதன்கிழமை ஜனவரி 25, 2023 | ஒளி: 08 கதிர்: 194 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# குட்டித்தேர்தலுக்கு நிதி கேட்டு கடிதம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் செலவுகளுக்குத் தேவையான நிதியைக் கேட்டு நிதியமைச்சின் செயலாளருக்கு தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா கடிதம் அனுப்பியுள்ளார். தற்போது கிடைத்திருக்கும் நிதியில் தேர்தலுக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மட்டும் முன்னெடுக்கமுடியும் என்று தவிசாளர் தெரிவித்துள்ளதுடன், தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபாய் வரை தேவைப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

# யாழில் 'ஆவா', 'கேணி' கும்பல்களுக்கு இடையே மோதல்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் 'ஆவா' கும்பலுக்கும் 'கேணி' கும்பலுக்கும் இடையில் சுன்னாகம் பகுதியில், வாகனங்களை பயன்படுத்தி ஏற்படுத்தப்பட்ட மோதலில் நால்வர் காயமடைந்துள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம்–காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் சந்தியில் இரு கும்பலைச் சேர்ந்தவர்கள் கார் மற்றும் கெப் வண்டியுடன் செவ்வாய்க்கிழமை (24) நேருக்கு நேர் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோதலில் கார் மற்றும் கொல் டாக்சி ஒன்றும் மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்தன.

இரு வாகனங்கள் மோதியதில், கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டதில், அவ்விரு கும்பல்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் வீதியில் பயணித்த பயணிகள் உட்பட நால்வர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2




# இலங்கை வான் பரப்பின் கட்டணங்கள் அதிகரிப்பு

கொழும்பு விமானப் பயணத் தகவல் வலயத்துக்கு மேலாக வான்பறப்பு செய்கின்ற சர்வதேச விமானப் பயணங்களுக்காக அறவிடப்படும் விமான செலுத்தல்களுக்கான கட்டணத்தைத் திருத்தம் செய்ய அமைச்சரவை அங்கிகாரம் அளித்துள்ளது.



தொடர்ச்சி P2



அடுத்த ஆறு மாதங்களில்

# கடன் மறுசீரமைப்பு பேச்சுகள் முடியும்

## மத்திய வங்கி ஆளுநர் அறிவிப்பு

தனது கடன்கள் அனைத்தையும் செலுத்துவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளதாகத் தெரிவித்த இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, அடுத்த ஆறு மாதங்களில் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை இலங்கை நிறைவு செய்யும் என்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

பொருளாதாரக் கண்ணோட்டம் 2023 என்ற தலைப்பில் செவ்வாய்க்கிழமை (24) இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றி போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

இந்தியாவின் உறுதிமொழியை

# ஏற்றது ஐ.எம்.எப்

## ஏனைய கடன்வழங்குநர்களுடன் இலங்கை பேச்சு; சீனாவும் உத்தரவாதம் வழங்கும் என எதிர்பார்ப்பு

இலங்கையின் கடன் நிலைத் தன்மையை மீட்டெடுப்பதற்காக இந்தியா வழங்கிய உறுதிமொழியை சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்) ஏற்றுள்ளதாகவும் ஏனைய கடன்வழங்குநர்களின் உறுதிமொழிக்காக காத்திருப்பதாகவும் நிதியத்தின் செய்தித் தொடர்பாளர், செவ்வாய்க்கிழமை (24) தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவித்திட்டத்தின் கீழ் பொதுக் கடனின் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கு நிதி/கடன் நிவாரணம் வழங்க உறுதிபூண்டுள்ளதாக நாணய நிர்வாகத்திடம் இந்தியா சுட்டிக்காட்டியதை உறுதிப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.




இதேபோன்ற உத்தரவாதங்களைப் பெறுவதற்கு ஏனைய உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் இலங்கை ஈடுபட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

# வரிகள் இன்றேல் IMF உதவி இல்லை

மஹேஸ்வரி விஜயனந்தன்

விதிக்கப்பட்டுள்ள புதிய வரிகளை நீக்கினால் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியாது என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (24) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

# "தேர்தலுக்கு நான் எதிரானவன் அல்ல"

எஸ்.கணேசன்

உள்ளூராட்சி சபைத்தேர்தலால் நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்படப்போவதில்லை எனத் தெரிவித்த, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் நிதியை மக்கள் நலன்களுக்காகவே பயன்படுத்த வேண்டும் என்றார்.



தொடர்ச்சி P2

நானுஓயா– ரதல்ல விபத்து

# நட்டஈடு வழங்க ஜனாதிபதி பணிப்பு

மஹேஸ்வரி விஜயனந்தன்

நானுஓயா- ரதல்ல பிரதேசத்தில், இந்த மாதம் 20ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு வழங்கப்படவேண்டிய நட்டஈட்டு தொகையை பாதிக்கப்பட்டவர்களுக்கு மிக விரைவில் முழுமையாக வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்ததாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன, எதிர்காலத்தில் இவ்வாறான விபத்துகள் இடம்பெறாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தொடர்ச்சி P2



# மின்கட்டண திருத்தத்தை

## இரத்து செய்யுமாறு மனு

உத்தேச மின் கட்டண திருத்தத்துக்கு அனுமதி வழங்கும் அமைச்சரவை தீர்மானத்தை இரத்து செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (24) ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

# "தேர்தலை பிற்போடும் சதிகளை தோற்கடிப்போம்"

பல மாதங்களாக இந்நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய தரப்புகளால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தடுக்கவும், சீர்குலைக்கவும் பெரும் சதியில் ஈடுபட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். வேட்பாளர்களின் கட்டுப்பணத்தை ஏற்காதிருக்கும் துரோக நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும், மற்றுமொரு சந்தர்ப்பத்தில் திறைசேரியின் செயலாளர் மூலம் தேர்தலுக்கான பணத்தை வழங்க முடியாது என்றும்,



தொடர்ச்சி P2

# டக்ளஸ் மீதான கொலை முயற்சி; பெண்ணுக்கு மரண தண்டனை

கொள்ளுப்பிட்டி பகுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தின் மீது 2004ஆம் ஆண்டு குண்டுத் தாக்குதல் நடத்தி நால்வரை கொலை செய்வதற்கு முயன்ற பெண் குண்டுதாரிக்கு உடந்தையாக இருந்த பெண்ணுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஜெயராணி என்ற தற்கொலை குண்டுதாரிக்கு உடந்தையாக செயற்பட்டமை தொடர்பில் செல்வகுமாரி சத்தியலீலா என்பவருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் மரணதண்டனையை திங்கட்கிழமை (23) விதித்துள்ளது.

தொடர்ச்சி P2

சட்டத்தரணிகளுக்கு எதிரான

# பி அறிக்கையை வாபஸ் பெற அனுமதி

சட்டத்தரணிகள் குழுவொன்றுக்கு எதிராக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பி அறிக்கையை வாபஸ் பெற்றுக்கொள்வதற்கு வாழைத்தோட்டம் பொலிஸாருக்கு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் செவ்வாய்கிழமை (24) அனுமதி வழங்கினார்.

தொடர்ச்சி P2

மின் கட்டண அதிகரிப்பு யோசனை

# சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற முஸ்தீபு

மின்சாரக் கட்டணத்தை இடைக்காலத்திலும் தற்காலிகமாகவும் உயர்த்துவதற்கு எவ்வித சட்ட ஏற்பாடுகளும் இல்லை என்று தெரிவித்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, சட்டமா அதிபரிடம் ஆலோசனை நடத்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக செவ்வாய்க்கிழமை (24) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்

# ஆனந்த பாலித உட்பட இருவருக்கு விளக்கமறியல்

ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் ஆனந்த பாலித்த, மின்சார பாவனையாளர்கள் சங்கத்தின் செயலாளர் தம்மிக்க சஞ்ஜீவ ஆகியோரை 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலிக கமகே, செவ்வாய்க்கிழமை (24) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

# அஜித் பிரசன்னவுக்கு 4 ஆண்டுகள் கடூழிய சிறை

நீதிமன்றத்தை அவமதித்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்த ஓய்வு பெற்ற இராணுவ மேஜரும் சட்டத்தரணியுமான அஜித் பிரசன்னவை குற்றவாளியாக இனங்கண்ட உயர்நீதிமன்றம், அவருக்கு 4 வருட கடூழிய சிறைதண்டனை விதித்து, செவ்வாய்க்கிழமை (24) தீர்ப்பளித்தது.




தொடர்ச்சி P2

# குலசிறி உடுகம்பொலவின் விடுவிப்பு கோரிக்கை நிராகரிப்பு

அத்துருகிரிய, மிலேனியம் சிட்டி உள்ளிட்ட பாதுகாப்பு இல்லங்களில் தங்கியிருந்த இராணுவ புலனாய்வு அதிகாரிகளை கைது செய்தமை மற்றும் இராணுவ இரகசியங்களை அம்பலப்படுத்திய குற்றச்சாட்டுகளில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொலவை விடுவித்து விடுதலை செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே, செவ்வாய்க்கிழமை (24) நிராகரித்தார்.

பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள உடுகம்பொல சார்பில் ஆஜரான சட்டத்தரணி முன்வைத்த கோரிக்கையே நிராகரிக்கப்பட்டது.



நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் பிரதிவாதியிடம் சாட்சியங்களை பெற்று வழக்கை தொடர நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக நீதிபதி அறிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## யாழில் 'ஆவா', 'கேணி' கும்பல்களுக்கு இடையே மோதல்

மேலும் மோதலில் ஈடுபட்டவர்கள் 'ஆவா' கும்பல், 'கேணி' கும்பலை சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படுவதாகவும், இருதரப்பினரிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக, இந்த மோதல் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கடன் மறுசீரமைப்பு...

இந்தியா, இந்த மாதத்தில் நிதியுதவி உறுதியளித்துள்ள நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் சீனா மற்றும் ஜப்பானில் இருந்து விரைவில் உறுதிமொழிகளை எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

1948 இல் பிரித்தானியாவில் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் மிக மோசமான நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை, கடுமையான சவால்களை கடந்த ஆண்டில் சந்தித்தது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.9 பில்லியன் டொலர் பிணையெடுப்பைப் பெறுவதற்கு இலங்கை முயன்று வருகின்ற போதும், நாணய நிதியத்துடன் இறுதி உடன்பாட்டை எட்டுவதற்கு அதன் மிகப்பெரிய இருதரப்புக் கடனாளிகளான சீனா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் ஆதரவு இலங்கைக்கு தேவைப்படுகிறது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு வலுவாக ஆதரவளிப்பதாக இந்தியா கடந்த வாரம் சர்வதேச நாணய நிதியத்திடம் தெரிவித்திருந்தது.

சர்வதேச நாணய நிதிய திட்டம் திறக்கப்பட்டதும், வணிக மற்றும் இருதரப்பு கடன் வழங்குபவர்களுடன் குறிப்பிட்ட கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை நாங்கள் ஆரம்பிப்போம் என்று கூறினார்.

ஆறு மாதங்களில் இந்தச் செயல்முறையை முடிப்பதற்கு தாம் நம்புவதாகவும் மிகப்பெரிய நிச்சயமற்ற நிலை கடன் மறுசீரமைப்புக்கான காலக்கெடுவாகும் என்று குறிப்பிட்ட வீரசிங்க, கடன் நிலைத்தன்மை உறுதிசெய்யப்பட்ட பின்னரே இலங்கை நிலையான வளர்ச்சிப் பாதைக்கு திரும்ப முடியும் என்றும் தெரிவித்தார்.

பாரிஸ் கிளப் கடனாளி நாடுகள் மற்றும் ஏனைய கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக வீரசிங்க மேலும் தெரிவித்தார்.

உள்நாட்டில், வீதங்களைக் குறைப்பதற்கான உள்ளூர் வங்கிகளுடன் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது என்றும் உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பது நிச்சயமற்றதாகவே உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2023 ஆம் ஆண்டில் இலங்கையின் பணவீக்கம் வேகமாக குறையும் என்றும், அந்த ஆண்டின் இறுதியில் அது ஒற்றை இலக்கத்தை எட்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் ஆளுநர் வீரசிங்க கூறினார்.

பணவீக்க எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வட்டி வீதங்களைக் குறைப்பதை மத்திய வங்கி நோக்கமாகக் கொண்டுள்ளது எனவும் நாணய நிதிய திட்டம் திறக்கப்பட்டவுடன் செயல்முறை விரைவாக கண்காணிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்படும் பணவீக்கம் நவம்பரில் 65% ஆக உயர்ந்து காணப்பட்ட நிலையில், 2022 டிசம்பரில் 59.2% ஆக குறைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவர திணைக்களம் திங்களன்று (23) வெளியிட்ட தரவுகள் சுட்டிக்காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நட்டஈடு வழங்க...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (24) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இது தொடர்பில் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பல காரணங்களை அமைச்சரவையில் முன்வைத்ததுடன், இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது என்றார்.

போக்குவரத்து ஆணைக்குழு ஊடாக போக்குவரத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதால் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட ஏனைய சிறுவர்களுடன் சுற்றுலா உள்ளிட்ட விடயங்களுக்காக பயணிக்கும் போது, என்னென்ன விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்பது தொடர்பிலும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும் நிபுணர் குழுவொன்று ஆராயவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆறுபேரைக் கொண்ட குறித்த குழுவானது, முன்னாள் போக்குவரத்து பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபரான சுமித் நிசங்க தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளதுடன், இதில் மொரட்டுவ பல்கலைக்கழகம், கல்வி அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு என்பவற்றின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

## சட்டமா அதிபரிடம்...

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு மேலதிகமாக சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளையும் இந்தக் ஆணைக்குழு பெற்றுக்கொள்ளும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, 2009ஆம் ஆண்டு மின்சக்தி சட்டத்துக்கு அமைய கோரப்பட்டுள்ள மின் கட்டண திருத்தத்துக்கு ஆணைக்குழு ஏகமனதாக இணக்கம் தெரிவித்துள்ளது என்றும் அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டுள்ள மின் கட்டண திருத்தத்தின் ஏனைய விடயங்கள் தொடர்பில் சட்ட ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தீர்மானமானது தமது ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானம் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அமலுக்கு வரும் வகையில் மின் கட்டணத்தை 65 முதல் 70 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியிருந்தது.

எனினும், இவ்வாறு மின் கட்டண அதிகரிப்பிற்கான அனுமதியை வழங்க முடியாதென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்த நிலையில், மின்சார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின் கட்டணத் திருத்தம் தொடர்பான கணக்கீடுகளை மேற்கொள்ளவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் தெரிவித்துள்ளது.

## ஏற்றது ஐ.எம்.எப்

போதுமான உத்தரவாதங்கள் பெறப்பட்டு, மீதமுள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன், இலங்கைக்கான நிதி-ஆதரவு திட்டமானது நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவின் அனுமதிக்காக முன்வைக்கப்படலாம் என்றும் அது நிதியுதவியைத் திறக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். கடன் மறுசீரமைப்பு தொடர்பாக இலங்கை சீனாவிடம் இருந்து முதல் பதிலைப் பெறுகிறது என்றும் இன்னும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்று பேச்சுவார்த்தைகளை நன்கு அறிந்த வட்டாரம் சுட்டிக்காட்டியுள்ளதுடன், அதன் பின்னர் நாணயநிதியத்துக்கு சீனா நேரடியாக தனதுஉத்தரவாதத்தை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவும் ஆரம்ப பதிலை வழங்கிய போதும் உரிய உத்தரவாதத்தை சீனா வழங்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், சீனாவின் பதிலைப் பற்றி சர்வதேச நாணய நிதியம் எதுவும் குறிப்பிடவில்லை.

பாரிஸ் கிளப் ஒஃப் வெஸ்டர்ன் லெண்டர்ஸ் மற்றும் ஜப்பான் ஆகியவை இறையாண்மை கடன் விடயங்களைக் கையாள்வதில் நீண்ட அனுபவம் கொண்டவை மற்றும் அவர்களின் கடன் உத்தரவாதம் ஒரு சம்பிரதாயமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2022 டிசெம்பர் மாதத்துக்குள் பணவியல் கொள்கையை கடுமையாக்கியதன் பின்னர் இலங்கை பெரும்பாலும் வெளி ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளது என்றும் சீனா போதுமான உத்தரவாதம் அளித்தவுடன் அது கடன் உத்தரவாதத்தை வழங்கும் என்றும் தற்போதைய நிலைப்பாட்டை அறிந்த ஓர் ஆதாரம் குறிப்படுகிறது.

## குட்டித்தேர்தலுக்கு நிதி...

தேவையான அளவு நிதி கிடைக்காவின் தேர்தலை நடத்த முடியாது என்று ஆணைக்குழுவின் அதிகாரிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் செலவுக்காக 2 கோடி 50 இலட்சம் ரூபாய், நிதியமைச்சில் இருந்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடந்தமாதம் கிடைத்தது.

இந்நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தேவையான அடிப்படை வேலைகளை மேற்கொள்வதற்கான விலைமனு கோரல் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

இந்நிலையில், தேர்தலை நடத்துவதற்கான நிதியை பெற்றுக்கொடுப்பது இயலாமையாகும் என நிதியமைச்சின் செயலாளர், உயர்நீதிமன்றத்துக்கு கடந்தவாரம் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை வான் பரப்பின்...

அதனால், கொழும்பு விமானப் பயணத் தகவல் வலயத்துக்கு மேலாக வான்பறப்பு செய்கின்ற சர்வதேச விமானப் பயணங்களுக்காக தற்போது அறிவிடப்படுகின்ற விமானச் செலுத்தல்களுக்கான கட்டணம் 2023.02.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தம் செய்யப்பட உள்ளது.

அதுதொடர்பில், துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## வரிகள் இன்றேல்...

தொடர்ந்து தெரிவித்த அவர், மாதாந்தம் 45,000 ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டுபவர்களிடம் வரி அறவிடுமாறு சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளதாகவும், நீண்ட கலந்துரையாடலின் பின்னர் 1 இலட்சம் ரூபாய் வரை வருமானம் ஈட்டுபவர்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டுக்கு வர முடியாவிட்டால் இரண்டு வாரங்களுக்கு மேல் நாட்டை நடத்த முடியாது என்றும் அவ்வாறு நாட்டை நடத்துவதற்கான வழிமுறைகள் யாரிடமாவது இருக்குமாக இருந்தால் அதனை செவிமடுக்க தயாராகவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## மின்கட்டண திருத்தத்தை

### இரத்து செய்யுமாறு மனு

மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுகர்வோர் சங்கம் மற்றும் சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் ஆகியவை குறித்த மனுவைத் தாக்கல் செய்துள்ளன.

இலங்கை மின்சார சபை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, அமைச்சரவை மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சாரச் சட்டம் மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் விதிகளை நிறைவேற்றி, ஒழுங்குமுறை ஆணைக்குழுவான பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை அமைச்சரவை குறைமதிப்புக்கு உட்படுத்தியுள்ளதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டிள்ளனர்.

இலங்கை மின்சார சபையுடன் இணைந்து மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அமைச்சரவை உத்தரவிட்டுள்ளதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சுயாதீன ஆணைக்குழு என்று சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர்கள், அவ்வாறான உத்தரவுகளை பிறப்பிப்பதற்கு அமைச்சரவைக்கு அதிகாரம் இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## "தேர்தலை பிற்போடும்...

அரசாங்கத்திடம் பணமில்லை என்றும், சமூக நலப்பணிகள் உட்பட சம்பளம் வழங்குவதற்குக் கூட முடியாது என தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இந்தத் தேர்தலை சீர்குலைக்கும் புதிய நடவடிக்கையாக நாளை (இன்று) கூடுகின்ற அரசியலமைப்பு பேரவையின் ஊடாக தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை மாற்றியமைத்து தேர்தல் ஆணைக்குழுவை சீர்குலைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மக்களின் இறையாண்மையில் கை வைத்தால் அதற்கு வழங்கும் தண்டனை நாட்டின் சட்டப்புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதால் மக்கள் இறையாண்மையை நாசம் செய்யும் முயற்சிகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நீதிமன்றம் செல்லும் என்றார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலை சீர்குலைக்க அரசியலமைப்பு பேரவை கூட்டத்தை பயன்படுத்தினால், நாட்டு மக்களின் வாக்குரிமையை பாதுகாக்கும் வகையில் அந்த சூட்சம நடவடிக்கையை நிச்சயமாக தோற்கடிப்பதுடன் அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## "தேர்தலுக்கு நான்...

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களின் பொதுச்செயலாளர்களுக்கும், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று தேர்தல் ஆணைக்குழுவில் செவ்வாய்க்கிழமை (24) நடைபெற்றது.

இதன்போது தேர்தலுக்கான நிதி, பிரசாரம் உட்பட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இச்சந்திப்பின் பிறகு ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான்,

"பல மில்லியன் ரூபாய்களை செலவழித்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதால் ஆட்சி மாறப்போவதில்லை. பொருளாதார நெருக்கடியும் தீரப்போவதில்லை. இது தொடர்பில் எனது நிலைப்பாட்டை ஏற்கெனவே அறிவித்துள்ளேன்" என்றார்.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டு மக்களுக்கு தேர்தல் குறித்த எண்ணம் இல்லை. அடுத்தவேளை உணவு பற்றிய ஐயப்பாடு பலருக்கும் உள்ளது. பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவது தொடர்பில் பிரச்சினை உள்ளது. எனவே, மக்களின் நலன்களுக்கே தற்போது முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

நான் தேர்தலுக்கு எதிரானவன் அல்லன். ஆனாலும் தேர்தலை நீதியாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு ஏதுவான சூழ்நிலை இருக்க வேண்டும் என்றார்.

## டக்ளஸ் மீதான கொலை...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை படுகொலை செய்யும் நோக்கில் 2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07ஆம் திகதி, பம்பலபிட்டி பகுதியிலிருந்த அவரது அலுவலகத்திற்குள் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தக் குண்டுத் தாக்குதலில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட நால்வர் உயிரிழந்திருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட செல்வகுமாரி சத்தியலீலாவுக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் 15 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனையை ஏற்கெனவே விதித்திருந்தது.

இந்த நிலையிலேயே, கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

## அஜித் பிரசன்னவுக்கு...

மேலும், 3 இலட்சம் ரூபாய் அபராதம் செலுத்துமாறும் கட்டளையிட்ட நீதிமன்றம், அபராதத்தை செலுத்தத் தவறின் மேலும் 6 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, எஸ்.துரைராஜா, காமினி அமரசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் தீர்ப்பை அறவித்ததுடன், சட்டத்தரணி என்ற அடிப்படையில் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரிக்கு உத்தரவிடப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க மற்றும் அவர் வழங்கிய தீர்ப்புகள் மற்றும் நீதிமன்றத்தில் ஆராயப்பட்ட பல வழக்குகளை விமர்சித்து நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் அஜித் பிரசன்னவுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கொழும்பு மேல் நீதிமன்றில் 2020ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு 2020ஆம் ஆண்டு பரிசீலிக்கப்பட்ட போது, அஜித் பிரச்னனவை விளக்கமறியலில் வைக்குமாறும் அவரின் மனநிலையை பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தம்மிக்க கணேபொல உத்தரவிட்டிருந்தார்.

## பி அறிக்கையை...

கொழும்பு மேலதிக நீதவான் தரங்கா மஹவத்த மீது சட்ட மா அதிபர் திணைக்களம் தேவையற்ற அழுத்தங்களை பிரயோகித்ததாக கூறி சட்டத்தரணிகள் குழுவொன்று கடந்த 18ஆம் திகதி கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

சிரேஷ்ட சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க, நுவான் போபகே, சேனக பெரேரா உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழு தேர்தல் சட்டங்கள் மற்றும் தேசிய வீதிச் சட்டத்தின் விதிகளை மீறி போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்ததாக வாழைத்தோட்டம் பொலிஸார் பி அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த அறிக்கையை பரிசீலித்த பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், விசாரணைகளை நடத்தி நீதிமன்றத்தில் விடயங்களை அறிக்கையிடுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

நேற்றையதினம் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அறிக்கையை மீளப் பெறுவதற்கு அனுமதி கோருவதாக வாழைத்தோட்டம் பொலிஸார் மன்றுக்கு அறிவித்ததையடுத்து நீதவான் அனுமதி வழங்கினார்.

இதேவேளை, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் பி அறிக்கையை தாக்கல் செய்யப்பட்டமை குறித்து விளக்க அறிக்கையை தாக்கல் செய்யுமாறு பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன பணிப்புரை விடுத்திருந்தார்.

பொலிஸ்மா அதிபர் அல்லது பொலிஸ் தலைமையகத்தின் சட்டப் பிரிவுக்கு தெரியாமல் பி அறிக்கை தாக்கல் செய்தமை குறித்து மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனிடமே அறிக்கை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆனந்த பாலித...

இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இருவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் திங்கட்கிழமை (23) இரவு இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்க ளை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்தே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்க ப்பட்டதுடன், அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பான தொலைபேசி உரையாடல்கள் குறித்த அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## குலசிறி உடுகம்பொலவின்...

பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானித்த நீதிபதி, அன்றைய தினம் குறித்த சாட்சியப் பட்டியலை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

2002ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து, செப்டெம்பர் 3ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் கொழும்பு மாவட்டத்தின் அத்துருகிரிய, கண்டி, கடுகண்ணாவை ஆகிய பகுதிகளில், இலங்கை இராணுவத்தினருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தகவல்களை சேமித்தார் என்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இராணுவப் புலனாய்வுப் பாதுகாப்பு இல்லங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள், இராணுவ உபகரணங்களைக் கைப்பற்றியமை மற்றும் மேற்படி உபகரணங்களின் புகைப்படங்கள், காணொளிகள் எடுத்தமை தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இராணுவ புலனாய்வு அதிகாரிகளை கைது செய்தமை மற்றும் இராணுவ இரகசியங்களை அம்பலப்படுத்தினார் என்றும் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக, குலசிறி உடுகம்பொல உட்பட 10 பேர் பெயர்குறிப்பிடப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

# சரணடைந்த புலிகளுக்கு நடந்தது என்ன?

## ஆணைக்குழு முன்பாக இன்று மீள விசாரணை

பா.நிரோஸ்

சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தொடர்பில் இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில், இலங்கை இராணுவத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு தொடர்பான விசாரணை இன்று (25) நடைபெற உள்ளது.

இறுதி யுத்தக் காலப் பகுதியில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் 06 கேள்விகளைக் கொண்ட RTI விண்ணப்பம் 2019.04.04 அன்று இலங்கை இராணுவத்துக்கு வழங்கப்பட்டிருந்தது.

"இறுதி யுத்தக் காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் எவரும் இராணுவத்திடம் சரணடையவில்லை. இலங்கை அரசாங்கத்திடமே சரணடைந்தனர்" என 25.06.2019 என திகதி குறிக்கப்பட்ட பதில் கடிதம் ஊடாக, இராணுவம் அப்போது பதில் வழங்கியிருந்தது.

இராணுவம் வழங்கிய பதிலில் திருப்தியில்லை என்பதால் 03.10.2019அன்று இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது.

இந்த மேன்முறையீடு தகவலறியும் உரிமைச் சட்டத்துக்குப் புறம்பாக மூன்று வருடங்களுக்குப் பின்னர் 03.11.2022 அன்று ஆணைக்குழு முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது ஆணைக்குழு முன்பாக சாட்சியம் வழங்கியிருந்த இராணுவம், தங்களிடம் புலிகள் எவரும் சரணடையவில்லை எனவும், சரணடைந்தவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் தம்மிடம் இல்லை என்றும் கூறியிருந்தது.

எனினும், இராணுவம் பொய் கூறுவதாக சுட்டிக்காட்டி இராணுவத்திடம் புலிகள் சரணடைந்தமைக்கான ஆதாரங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டன.

இதனை ஆராய்ந்த ஆணைக்குழு, மேன்முறையீட்டாளர் எழுத்துமூல சமர்ப்பணம் ஒன்றை வழங்க வேண்டுமெனவும் அதற்குப் பதில் எழுத்துமூல சமர்ப்பணம் ஒன்றை இராணுவம் வழங்க வேண்டுமெனவும் உத்தரவிட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் 04.01.2023 அன்று மீண்டும் இந்த மேன்முறையீடு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மேன்முறையீட்டாளரால் வழங்கப்பட்டுள்ள எழுத்துமூல சமர்ப்பணத்துக்குப் பதில் எழுத்துல சமர்ப்பணத்தை வழங்க, 17.01.2023ஆம் திகதி வரையில் காலஅவகாசம் வழங்க வேண்டுமென கோரியிருந்தது. இதனை ஏற்றுக்கொண்டு 23.01.2023 அன்றுக்கு முன்பாக பதில் எழுத்துமூல சமர்ப்பணத்தை வழங்க வேண்டுமென உத்தரவிட்டதோடு, இந்த மேன்முறையீடும் மீண்டும் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் ஒத்திவைக்கப்பட்டது.




இவ்வாறான நிலையில் 2,253 பக்கங்களைக் கொண்ட பதில் எழுத்துமூல சமர்ப்பணத்தை இராணுவம் 16.01.2023ஆம் திகதி வழங்கியுள்ளது. எனினும், மேன்முறையீட்டாளர் கோரிய தகவல்கள் இராணுவத்தின் பதில் எழுத்துமூல சமர்ப்பணத்தில் இல்லை எனத் தெரிவித்து 23.01.2023 அன்று மேன்முறையீட்டாளரால் மற்றோர் எழுத்துமூல சமர்ப்பணம் தகவலறியும் ஆணைக்குழுவுக்கும், இலங்கை இராணுவத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியிலேயே இன்று மீண்டும் விசாரணை நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பத்துளுஓயாவில் பௌசர் வீழ்ந்து விபத்து

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் பத்துளுஓயா பகுதியில் உள்ள பாலத்துக்குள் எரிபொருள் பௌசர், செவ்வாய்க்கிழமை (24) அதிகாலை விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

சபுகஸ்கந்தையில் இருந்து பாலாவி சீமெந்து தொழிற்சாலையில் எரிபொருளை விநியோகித்துவிட்டு மீண்டும் கொழும்பு நோக்கி திரும்பிக் கொண்டிருந்தபோது, பத்துளுஓயாப் பகுதியில் பௌசர் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கத்தால் பாலத்தின் பாதுகாப்பு வேலியை உடைத்துக் கொண்டு பத்துளுஓயா நீர்த் தேக்கத்தினுள் விழுந்துள்ளது என முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான எரிபொருள் பௌசரில் இருந்து சாரதியை பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து மீட்டெடுத்து வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

பாலத்தினுள் விழுந்துள்ள எரிபொருள் பௌசர் விழுந்த இடத்தில் இருந்து சுமார் 60 மீற்றர் தூரம் வரை சென்று ரயில் பாலத்துக்கு அடியில் மோதுண்டு நின்றுள்ளது.

விபத்துக்குள்ளான பௌசரை மீட்கும் பணியையும் மேலதிக விசாரணையையும் முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பஸ் சாரதி தாக்கி நடத்துநர் உயிரிழப்பு

டி.கே.பி.கபில

மொனராகலையில் இருந்து கட்டுநாயக்கவுக்கு சேவையில் ஈடுபடுத்தப்படும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸின் சாரதியால் தாக்கப்பட்டு, சிகிச்சைப் பெற்றுவந்த அதே பஸ்ஸின் நடத்துநர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 23ஆம் திகதி சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த குறித்த பஸ், பயணிகள் உணவு உட்கொள்வதற்காக இரவு 7.30 மணியளவில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், சாரதிக்கும் நடத்துநருக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் பேச்சுகள் மோதலாக மாறிய நிலையில், பஸ் நடத்துநர், சாரதியால் தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தால் காயமடைந்த 38 வயதுடைய நடத்துநர், கட்டுநாயக்கா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துவிட்டு நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சைப் பெற்றுவந்த பஸ் நடத்துநர் நேற்று (24) உயிரிழந்துள்ளதாகவும், சந்தேக நபரான சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கட்டுநாயக்கா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.






# சுகிர்தராஜனின் 17ஆவது ஆண்டு நினைவு தினம்...

திருகோணமலையில் சுட்டுக் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ். சுகிர்தராஜனின் 17ஆவது ஆண்டு நினைவு, மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவு தூபியில் செவ்வாய்க்கிழமை (24) நினைவுக்கூறப்பட்டது. (வ.சக்தி)



# வர்த்தமானி அறிவித்தலுக்கு அனுமதி

கம்பனிகள் மற்றும் சங்கங்கள் கட்டணங்களைத் திருத்துவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கு கைத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமையில் கைத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் பாராளுமன்றத்தில் நடைபெற்றபோதே இதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இதற்கமைய 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 477ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 527ஆம் பிரிவின் கீழ் மற்றும் 2005ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்துடன் (திருத்தியமைக்கப்பட்ட) வாசிக்கப்பட வேண்டிய 1891ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (123ஆம் அத்தியாயம்) 19ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு அமைச்சுசார் ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 2022 ஒக்டோபர் 25ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன், இதன் ஊடாக 2016, ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதிய 1990/12ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட கம்பனிகள் மற்றும் சங்கங்களுக்கான கட்டணங்கள் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இது தவிர, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பல்வேறு தொழில்களை ஊக்குவிப்பது குறித்தும், புதிய தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காகத் தேவையான கடனுதவி வழங்குவது குறித்தும், கடன்கள் திறம்பட பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பது தொடர்பிலும் இதன்போது ஆலோசிக்கப்பட்டது.

# ஐக்கிய மக்கள் சக்தியின் பலத்தை உறுதி செய்வோம்



உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பலத்தை உறுதி செய்வோம் எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான், அரசாங்கத்தை விரட்டியடிக்கும் போராட்டமாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் அமையும் எனவும் தெரிவித்தார்.

நடைபெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலை அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்கான முதலாவது போராட்டமாக பயன்படுத்தப்போகிறோம். கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தியின் அதிகாரத்தை உறுதி செய்துகொண்டு, கொழும்பில் வாழும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவோம்.

எரிபொருள் தொடர்பிலும் அதில் இடம்பெற்று வந்த ஊழல் தொடர்பிலும் அரசாங்கத்தை விமர்சித்து வந்த ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் ஆனந்த பாலித கைது செய்யப்பட்டுள்ளார். அரசாங்கத்துக்கு இவர் பெரும் தலையிடியாக இருந்தார். ஆனந்த பாலிதவை கைது செய்து போராட்டத்தை நிறுத்திவிட முடியாது.

150 வருடங்களாக ஐக்கிய தேசிய கட்சியே கொழும்பு மாநகர சபையை ஆட்சி செய்வதாக தற்போதைய மேயர் கூறியிருக்கிறார். அது தவறு. ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிடக்கூட ஒருவர் இல்லை. இதனாலேயே மொட்டுடன் இணைந்து போட்டியிட்டுள்ளனர். ஐ.தே.க வங்குரோத்தடைந்துள்ளது. இவர்களது கட்சியில் வேட்பாளர் கூட இல்லாத நிலையே காணப்படுகிறது என்றார்.

கொழும்பு நகரம் வளர்ச்சியடையும்போது நாடும் வளர்ச்சியடையும். நாட்டு மக்களை அபிவிருத்தியடையச் செய்யும் வேலைத்திட்டங்களை கொழும்பில் ஆரம்பிப்போம் எனவும் தெரிவித்தார்.

மார்ச் இறுதியில்

# முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்க்கலாம்



வி.ரி. சகாதேவராஜா

அரச பாடசாலைகள், அரச அனுமதி பெற்ற பாடசாலைகளில் புதிய வருடத்தில் (2023) முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிக்கும் நிகழ்வு தொடர்பில் கல்வி அமைச்சு சுற்றுநிரூபம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

முறையாக வகுப்பு ஆரம்பிக்கும் நிகழ்வு தமிழ், சிங்கள பாடசாலைகளில் மார்ச் 28ஆம் திகதியும் முஸ்லிம் பாடசாலைகளில் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முறையாக வகுப்புகளை ஆரம்பிக்கின்ற பொழுது ஆரம்பக்கல்வி தொடர்பான விழிப்புணர்வை பெற்றோர்களுக்கு அறிவூட்டம் செய்கின்ற வேலைத்திட்டம் ஒன்றும் முன் எடுக்கப்பட வேண்டும் எனவும், அதை விட கொவிட் 19 முறைக்கு அமைவாக குறுகிய நேரத்துக்குள் இந்த நிகழ்வை நடத்திமுடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# புகையிலையுடன் இருவர் கைது

இலங்கை கடற்படையினரால் செவ்வாய்க்கிழமை (24) அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் நீர்கொழும்பு - துன்கல்பிடிய களப்புப் பிரதேசத்தில் வைத்து, சட்டவிரோதமாக நாட்டுக்குள் கடத்தி வர முயன்ற 1,105 கிலோ கிராமுக்கும் அதிகமான புகையிலையுடன் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்கரையோர பிரதேசங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்காக இலங்கை கடற்படையினர், கடலோர பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து நாடுமுழுவதிலும் கரையோர ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறனர்.

இவ்வாறான விசேட ரோந்து நடவடிக்கையின்போதே, மேற்குறித்த இரு சந்தேகநபர்களும் அவர்கள் பயன்படுத்திய படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 42, 44 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.



இந்திய படகுகள் அத்துமீறல்;

# கடற்படையினரின் நடவடிக்கை விரிவுபடுத்தப்பட வேண்டும்

இந்திய கடற்றொழிலாளர்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் மாவட்டங்கள் அனைத்திலும் பாதுகாப்பு பொறிமுறையொன்றை உடன் அமலுக்கு வரும் வகையில் செயற்படுத்துமாறும் தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை முழுமையாகக் கட்டுப்படுத்துவது தொடர்பாக, கடற்படை மற்றும் சம்பந்தப்பட்ட கடற்றொழில் அதிகாரிகளுடன் செவ்வாய்க்கிழமை (24) நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போன்ற குறுகிய அரசியல் நோக்கம் கொண்டவர்களால் இந்திய கடற்றொழிலாளர்களின் விவகாரத்தை தவறாக பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், நாடுகளுக்கு இடையேயான அசௌகரியங்களை உருவாக்கக்கூடிய எந்தவிதமான செயற்பாடுகளையும் அனுமதிக்க முடியாதென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப் படகுகள் எமது கடற் பரப்புக்கு வருகின்ற நிலையில், கடற் படையினரின் நடவடிக்கை போதுமானதாக இல்லை எனவும் குற்றஞ்சுமத்தினார்.

பல்லினத்துவத்தை அங்கிகரிக்கும்

# ஊடகவியல் துறைக்கு உயிர்ப்பூட்ட வேண்டும்

ஏ.எச்.ஏ ஹுஸைன்



பக்கச்சார்பு இல்லாத பல்லினத்துவத்தை, பல்லுயிர்த் தன்மையை அங்கிகரித்து மதிப்பளித்து, அவற்றை வாழ வைக்கும் நெறிமுறையை, இளம் சமுதாயத்தினர் வளப்படுத்த வேண்டும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கள ஒருங்கிணைப்பாளர் எம். பிரதீபன் தெரிவித்தார்.

'பிரஜைகளின் அபிலாஷைகளை இனம்கண்டு அவற்றுக்கு மாற்றுத் தீர்வு காணக்கூடிய வழிவகைகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் இளம் ஊடகவியலாளர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு' மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கிறிஸ்தவ வாலிபர் அமைப்பின் மண்டபத்தில் திங்கட்கிழமை (23) நடைபெற்ற இந்தப் பயிற்சி நெறிக்கு, ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் சமூக வலைத்தளப் பதிவர்களான இளம் ஆக்கபூர்வப் படைப்பாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

கள ஒருங்கிணைப்பாளர் பிரதீபன் மேலும் தெரிவித்ததாவது; மனிதநேயம் மிக்க ஒரு சமூகத்தை வடிவமைப்பதில், இளம் ஊடகவியலாளர்களின் பங்கும் பணியும் காத்திரமானது. அதற்காக இளம் ஊடகவியலாளர்கள் உருவாக்கப்பட வேண்டும். அவர்கள் மூலமாக பல்லினத்துவத்தை அங்கிகரித்து, மதிப்பளிக்கும் ஊடகவியல் துறைக்கு உயிர்ப்பூட்ட வேண்டும்.

துரதிர்ஷ்ட வசமாக இலங்கையின் கல்வி முறைமையில் இந்த அணுகுமுறைகள் இல்லை. அதை இதுபோன்ற பயிற்சி நெறிகள், தேடல் அறிவுகள் மூலம் மேலும் மேலும் வளப்படுத்திக் கொள்ளலாம். இலங்கை சமுதாயத்தினரை அவர்கள் எந்த இனம், மதம், சாதி, மொழி என்றில்லாமல் வாழ வைக்கும் ஆக்கபூர்வ அபிவிருத்திப் பங்காளர்களாக மாற்ற வேண்டும். இந்த நோக்கத்தை அடைய, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் உங்களுக்குக் கை கொடுக்கும் என்றார்.

இந்தப் பயிற்சி நெறியில் ஊடகம், திரைத்துறை, ஒளிப்பதிவு போன்றவற்றில் பயிற்சியாளராகப் பணியாற்றி வரும் நடராஜா மணிவாணன் உட்பட இன்னும் சிரேஷ்ட ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர்.



அம்பாரை மாவட்டத்தில் அறுவடை அண்மிக்கையில்

## பயிர்களை தாக்கும் நோய்கள் அதிகரிப்பு

எம்.எல்.எஸ் டீன்

அம்பாரை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் தற்போது வேளாண்மை குடலைப் பருவமாகவும், கதிர் விரியும் நிலையிலும் இருந்து வருகிறது. இவ்வாறான சூழ்நிலையில், வேளாண்மை வளர்ச்சி குன்றியும் மஞ்சள் நிறமாகவும் மாறி வரும் நிலை, ஒரு வகை நோய்த்தாக்கமாக இருக்கும் என பங்கசு, கிருமி நாசினிகளை விவசாயிகள் விசிறி வருகின்றனர்.

இவைதவிர, அறக்கொட்டியான் பூச்சியின் தாக்கம், ஈ பூச்சியின் தாக்கம் என பல்வேறு நோய்கள் நெற்செய்கைக்கு ஏற்பட்டுவருகிறது. இதனால், விவசாயச் செய்கை பெரிதும் பாதிப்படைந்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பொருளாதாரப் பிரச்சினை, கொரோனா முடக்கம் எனப் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, கடன்பட்டு விவசாயம் மேற்கொண்ட விவசாயிகளின் நிலை மிகவும் மோசமாகவுள்ளது.

இன்னும் சில நாள்களில் அறுவடை இடம்பெறவுள்ள நிலையில், நெல்லுக்கான உத்தரவாத விலையை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும் எனவும் அம்பாரை மாவட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## மலேசிய ரோட்டரி கழகத்துடன் சந்திப்பு

வி.ரி சகாதேவராஜா




மலேசிய ரோட்டரி கழகத்துடன் மட்டக்களப்பு ரோட்டரிக் கழகம் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது.

இதன் முதல் அங்கமாக, மலேசியா ரோட்டரி கழகத்தை திருகோணமலை ரோட்டரி நிலையத்தில், மட்டக்களப்பு ரோட்டரி கழக தலைவர் றோட்டரியன் பி. ரமணன் தலைமையிலான குழுவினர் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது, எதிர்காலத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய பல வேலைத் திட்டங்கள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மலேசியா ரோட்டரி கழகத்தால் வசதி குறைந்த மாணவிக்கு சைக்கிள் ஒன்றும் வழங்கப்பட்டது.



உணவகங்களில் உணவு கையாள்பவர்களுக்கு

## மருத்துவ சான்றிதழ் அவசியம்

எம்.எஸ்.எம் ஹனீபா




அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களிலுள்ள உணவகங்களில் உணவு கையாள்பவர்கள், உரிய மருத்துவ சான்றிதழைத் தன்வசம் வைத்திருத்தல் அவசியமென, அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எம்.எப்.ஏ காதர் நேற்று (24) தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள், பேக்கரிகள் போன்றவை பரிசோதிக்கப்பட்டு, உணவு பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வும் தரச்சான்றிதழ் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

பரிசோதனையின் போது, பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள், பொருட்கள், காலவதியான பொருட்கள் என்பன கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், அதன் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், குறித்த உணவகங்களும் உணவு கையாளும் நிலையங்களும் மூடப்படுமெனவும் தெரிவித்தார்.

உணவு தயாரிப்போர், உணவு விநியோகிக்கும் இடம், பயன்படுத்தும் உபகரணம் போன்றவற்றைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனவும், உணவகங்களில் பணியாற்றுபவர்கள் கையுறை பாவிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

## புதிய வலய கல்வி பணிப்பாளர்



வி.ரி சகாதேவராஜா

சம்மாந்துறை வலய கல்வி பணிமனையின் புதிய வலய கல்வி பணிப்பாளராக கடமையேற்றுக்கொண்ட டொக்டர் எஸ்.எம்.எம் உமர் மௌலானாவை அலுவலகத்தின் கல்விசார் உத்தியோகத்தர்கள் நேற்று (24) மாலை அணிவித்து வரவேற்பளித்தனர்.

# சர்வமத ஒன்றிப்பே சமாதானத்தின் முதற்படி

கரித்தாஸ் வன்னி கியூடெக்

சண்முகம் தவசீலன்



கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் 'இலங்கையில் அனைத்து மதங்களுக்கிடையில் சகிப்புத்தன்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான பொதுவான பார்வையை ஊக்கவித்தல்' எனும் செயற்றிட்டத்தின் கீழ், 2022 ஆண்டில் சர்வமதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக, பல செயற்பாடுகள் இயக்குநர் அருட்தந்தை செபஜீபன் அடிகளாரின் தலைமையின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

சர்வமத ஒன்றிப்பின் மூலமே நாட்டின் சமாதானத்தை அடைய முடியும் எனும் நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்ட இச்செயற்றிட்டத்தில் முதல் கட்ட நடவடிக்கையாக, ஆறு கிராமங்களின் பிரதிநிதிகள், கிராம மட்ட சிறுவர்கள், இளைஞர்கள், பிரதேச மட்ட சர்வமத மேம்பாட்டுக்குழுக்கள் நிர்ணயிக்கப்பட்டு, சர்வமதங்களை வலுப்படுத்தல் எனும் நோக்கில் அவர்களுக்கான விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

சர்வமத சகவாழ்வு அரங்கத்தின் சர்வமத தலைவர்களின் வெளிக்கள ஒன்றுகூடலும் வெளிக்கள தரிசிப்பும் பல்சமயத் தலைவர்களினுடைய மக்கள் சந்திப்புகளால் மதவிழுமியங்கள் பகரப்பட்டதுடன் இந்நிகழ்ச்சித் திட்டம் நல்லுறவு பாலத்தை வலுப்படுத்தும் முகமாகவும் அமைந்தது.

## மழையால் வீதியில் உலர வைத்த நெல் பாதிப்பு

சுப்பிரமணியம் பாஸ்கரன்

பூநகரி பிரதேசத்தில் நேற்று முன்தினம் (23) இரவு பெய்த மழையால், அறுவடை செய்து வீதியில் உலர வைத்திருந்த நெல் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், கால போக நெற் செய்கை அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நெல்லை உரிய விலையில் சந்தைப்படுத்த முடியாத நிலை தொடர்வதுடன், நெல் உலர விடும் தளங்கள் போதியளவு இல்லாத நிலையால் பல்வேறு நெருக்கடிகளுக்கு விவசாயிகள் முகம்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக, வீதிகளில் நெல்லை உலர விட்டிருந்த சமயம், மழை பெய்ததன் காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



ஹற்றன் நேஷனல் வங்கியால்

## மாங்குளம் 'உயிரிழை'க்கு உபகரணங்கள் கையளிப்பு

செ. கீதாஞ்சன்

ஹற்றன் நேஷனல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி, நேற்று முன்தினம் (23) வடமாகாணத்துக்கு வருகை தந்திருந்த ஹற்றன் நேஷனல் வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி ஜொனதன் அலஸ், மாங்குளத்தில் அமைந்துள்ள முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கான 'உயிரிழை' அலுவலகத்துக்கு விஜயம் மேற்கொண்டு அங்கிருக்கும் மாற்று திறனாளிகளுடன் கலந்துரையாடியிருந்தார்.

மாற்றுவலுவுள்ளோரின் தேவைப்பாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்ட ஜொனதன் அலஸ், தன்னாலான ஒத்துழைப்புகளை அவர்களுக்கு நல்கத் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

'உயிரிழை' அமைப்பிற்கு 01 சக்கரகதிரையும் 02 காற்று மெத்தைகளும் தலைமை நிர்வாக அதிகாரியால் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் ஹற்றன் நேஷனல் வங்கி வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் நிஷாந்தன் கருணைராஜ், மல்லாவி வங்கிக் கிளையின் முகாமையாளர் அமிர்தலிங்கம் அமிர்தசொருபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.





யாழ். போதனா வைத்தியசாலையில்

## கறுப்புப் பட்டி போராட்டம்

செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நேற்று (24) தமது எதிர்ப்பைத் தெரிவித்து, கறுப்பு பட்டி அணிந்து கடமையை மேற்கொண்டனர்.

அரச வைத்தியசாலையில் நிலவும் மருந்து தட்டுப்பாடு, சத்திர சிகிச்சை உபகரணங்களுக்கான தட்டுப்பாடு என்பவற்றை நிவர்த்தி செய்து, அதற்குரிய வளங்களை சீரான வழங்குமாறு கோரியும், வரி என்ற பெயரில் அரசாங்கத்தால் பறிக்கப்படும் சம்பள பணத்துக்கு எதிராகவும் இந்தக் கறுப்புப் பட்டி போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

அத்துடன், எதிர்வரும் வியாழக்கிழமை வடமாகாணம் முழுவதும் அரசாங்கத்தால் நிர்வகிக்கத் தவறிய சரியான மருந்து பொருட்களுக்கான வழங்கலுக்கு எதிராக, அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் பொதுமக்களிடம் இருந்து கையெழுத்து பெறும் இயக்கமும் முன்னெடுக்கப்படவுள்ளது.

டிப்பரில் மணல் ஏற்றியவருக்கு

## 75,000 ரூபாய் தண்டம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சியில் அனுமதி பத்திரமன்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்றவருக்கு 75,000 ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், அனுமதிப்பத்திரமன்றி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தையும் அதன் சாரதியையும் கைது செய்த பொலிஸார், நேற்று முன்தினம் (23) கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியதையடுத்து 75,000 ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.

## ஒரு குட நீருக்காக 200 படிகள் ஏறியும்

# நீரின்றி அவதி





■ துவாரகஷான்

அக்கரப்பத்தனை பன்சல கொலனி மக்கள் ஒரு குடம் நீருக்காக 200 படிகள் ஏறிய இறங்குகின்ற போதிலும் நீரில்லாமல் ஏமாற்றத்துடன் திரும்பி செல்லும் நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இக்கொலனியில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 260 இற்கு அதிகமான மக்கள் ஒவ்வொரு நாளும் குடிநீர் பிரச்சனையை எதிர்கொண்டு வருவதுடன், பிரதேச சபை ஊடாக வாரத்துக்கு ஒரு முறை சிறிய நீர்த் தாங்கியில் நீர் நிரப்பி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தை பொறுத்தவரையில், நீர் வளம் காணப்பட்ட போதிலும் இம்மக்களுக்கு நீரை பெற்றுக் கொள்வது எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது.

இம்மக்களின் நலன் கருதி, சிரமம் இல்லாமல் குடிநீரை பெற்றுக் கொள்ளும் வகையில் நீர் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு இக்கொலனியில் வாழும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



## பசறை கல்வி வலயத்தில்

பசறை வலயக் கல்விக் காரியாலயத்தினர் ஏற்பாடு செய்த பொங்கல் விழா, வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. எம்.ஏ சரினா பேகம் தலைமையில், உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.மோகனேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது.

(நடராஜா மலர்வேந்தன்)







## சடலம் மீட்பு

■ என்.ஆராச்சி

யட்டியாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேரகஸ் சந்தி பகுதியிலுள்ள வீஓயாவுக்கு அருகில் அழுகிய நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை (23) மாலை குறித்த பகுதியில் நடந்து சென்ற நபர் ஒருவர், சடலமொன்று கிடப்பதை அவதானித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவித்துள்ளதுடன், சடலம் கரவனெல்ல வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.



### பலரின் கண்ணீருக்கு மத்தியில்

## தினேஸின் உடல் நல்லடக்கம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நானுஓயா- ரதல்ல பகுதியில் 20ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த வேனின் சாரதியின் இறுதிக் கிரியைகள் பலரின் கண்ணீருக்கு மத்தியில் திங்கட்கிழமை (23) நடைபெற்றன.

28 வயதான ஆர்.என்.பி தினேஸ் என்ற இளைஞன் செலுத்திய வேன் மீது, பாடசாலை கல்விச் சுற்றுலா சென்ற பஸ்ஸொன்று ரதல்ல பகுதியில் சனிக்கிழமை (21) மோதியதால் குறித்த இளைஞன் உள்ளிட்ட எழுவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்த நிலையில், மத்திய மாகாண ஆளுநர் லலித்.யூ.கமகே இறந்தவர்களின் வீடுகளுக்குச் சென்று அரசாங்கத்தின் சார்பில் அஞ்சலி செலுத்தியிருந்தார்.

இந்த நிலையில், விபத்தில் உயிரிழந்த தினேஸின் இறுதிக் கிரியைகள் குடாகம பொது மயானத்தில் நேற்று முன்தினம் (23) நடைபெற்றன.

## சிறந்த சேவையை முன்னெடுக்க சகலரும் ஒத்துழைக்க வேண்டும்

### அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு

■ ஆ.ரமேஸ்



பொது மக்களுக்கு சிறந்த, சுத்தமான குடிநீரை வழங்குவதை நோக்கமாகவும், இலக்காகவும் கொண்டு சேவையாற்ற உள்ளேன் என தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சராக பதவியேற்ற அமைச்சர் ஜீவன் தொண்டமான், தலைமையில் நீர்வழங்கல் அமைச்சின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (24) நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

பொது மக்களின் எதிர்பார்ப்பை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்படும் சேவை ஊடாக அந்த இலக்கை அடைய அமைச்சுகளின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்கள், அதிகாரிகளின் பூரணமான ஒத்துழைப்பையும், ஆதரவையும் எதிர்பார்க்கிறேன்.

அத்துடன், இலக்கை அடைய அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் நீர்வழங்கல் அமைச்சின் ஊடாக 2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் அதேபோன்று 2023 ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக அமைச்சின் அதிகாரிகளால் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

## சர்வமத செயற்குழுக்கூட்டம்

பதுளை மாவட்ட சர்வமத செயற்குழுக் கூட்டம், சர்வமத செயற்குழு இணைப்பாளர் ஆர். ஸ்ரீ காந்தன் தலைமையில் பதுளை, கிராண்ட் ரெஜன்சி விடுதியில் நடைபெற்றது.

(எம். செல்வராஜா)





## மட்டக்குதிரையால் இருவருக்கு காயம்


■ எஸ்.கே. குமார்

நுவரெலியா -பதுளை பிரதான வீதியில் செவ்வாய்க்கிழமை (24) காலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த இளைஞர்கள் இருவரும் மார்காஸ்தோட்ட பகுதியில் இருந்து நுவரெலியா பிரதான நகரை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது, மட்டக்குதிரை ஒன்று மோட்டார் சைக்கிளில் மோதியமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறிப்பாக நுவரெலியா-கண்டி, நுவரெலியா - உடப்புஸ்ஸலாவ, நுவரெலியா - பதுளை போன்ற வீதிகளில் அதிகமான வாகனங்கள் தினமும் பயணிக்கும் நிலையில், இந்த வீதிகளில் 30க்கும் மேற்பட்ட மட்டக்குதிரைகள் கட்டுபாடின்றி தினமும் சுற்றித்திரிவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்துக்கு இடையூறாக வீதிகளில் ஆங்காங்கே மட்டக்குதிரைகள் படுத்து ஓய்வெடுக்கின்றன. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், அடிக்கடி வாகன விபத்துகள் ஏற்பட்டு, உயிரிழப்பு ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.



எனவே, வீதிகளில் சுற்றித்திரியும் மட்டக்குதிரைகளை அப்புறப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அல்லது மட்டக்குதிரை வளர்ப்போருக்கு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதையும் மீறும் பட்சத்தில் மட்டக்குதிரையை பறிமுதல் செய்து அதிகரித்த தண்டப்பணத்தை விதிக்க நுவரெலியா மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்களும் வாகன சாரதிகளும் கோரிக்கை விடுக்கின்றனர்.

### டிக்கோயா வைத்தியசாலையின் வைத்தியர்கள்

## கறுப்புப் பட்டியுடன் கடமையில் ஈடுபட்டனர்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையின் வைத்தியர்கள் கறுப்புப் பட்டி அணிந்து செவ்வாய்க்கிழமை (24) கடமைகளில் ஈடுபட்டிருந்ததுடன் சிகிச்சைக்காக வருகை தந்த நோயாளர்களும் அங்கு வைக்கப்பட்டிருந்த மனுவில் கையெழுத்திட்டனர்.

அத்துடன் வைத்தியசாலை வளாகத்திலும் கறுப்பு கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

டிக்கோயா வைத்தியசாலையில் தற்போது நிலவும் பாரிய மருந்து தட்டுப்பாடு, மனித



வளப் பற்றாக்குறை, வரி சுமை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு, கறுப்புப் பட்டி அணிந்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இந்த வாரத்தை கறுப்பு வாரமாக ஆரம்பித்துள்ள நிலையில், இந்த வாரம் முழுவதும் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் இதற்கு ஆதரவு தெரிவித்தே டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையின் வைத்தியர்களும் கறுப்புப் பட்டி அணிந்து கடமைகளுக்கு சமூகமளிப்பதாகவும் வைத்தியசாலையின் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## தெரணியகலையில் தைப்பொங்கல்

தெரணியகலை பிரதேச செயலாளர் மதுசானி சில்வாவின் பங்களிப்புடன் பிரதேச செயலகத்தில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதில் பிரதேச செயலக அதிகாரிகளும் கதிரேசன் வித்தியாலய மாணவர்களும் கலந்துகொண்டனர்.

(என். ஆராச்சி)





# பரீட்சார்த்திகளின் எதிர்காலத்தையே இருளுக்குள் தள்ளும் மின்வெட்டு

முன்னெப்போதையும் விட இவ்வருடம் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர் என்பது இரகசியமல்ல! கடும் சவால்கள், நெருக்கடிகள், காலம் தாழ்த்திய பரீட்சையால், தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் உயர்தர பரீட்சையில் தோற்றியிருக்கும் பரீட்சார்த்திகள் பல்வேறான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கிக்கொண்டதன் பின்னர், மின்வெட்டு அமல்படுத்தப்பட்டது. நாட்டுக்கு போதியளவான மழை கிடைக்காமல் போனால் மின் உற்பத்திச் செய்யும் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறையும். அவ்வாறான காலப்பகுதியில் மின்வெட்டு அமல்படுத்தப்படும். அவ்வாறான காலப்பகுதியில் மிக முக்கியமான பரீட்சைகள் கடந்தகாலங்களில் நடத்தப்படவில்லை.

எனினும், கொரோனாவுக்குப் பின்னர், பரீட்சை அட்டவணையில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டது. இதனால், கடந்த காலங்களில் ஓகஸ்ட் மாதங்களில் நடத்தப்பட்ட உயர்தரப் பரீட்சையும் டிசெம்பர் மாதம் நடத்தப்பட்ட சாதாரண தரப் பரீட்சையும் பிற்போடப்பட்டன.

பரீட்சைகள் பிற்போடப்படுவதால், அடுத்தடுத்த கட்டங்களை நோக்கி முன்னோக்கி நகரவேண்டிய மாணவர்கள், சில மாதங்களுக்கு காத்திருக்க வேண்டிய நிலைமையே ஏற்பட்டது. இது அவர்களின் வாழ்க்கையில் ஒரு படியை பின்னோக்கி இழுத்துச் சென்றுவிட்டது. சா/த பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் உ/தரத்துக்குள் இன்னுமே நுழையவில்லை.

உயர்தரப் பரீட்சை காலத்தில் மின்வெட்டை அமல்படுத்தவேண்டாமென கடுமையாக வலியுறுத்தப்பட்டது. எனினும், வெறுமனே 20 நிமிடங்கள் மட்டுமே குறைத்து, இரண்டு மணிநேரம் மின்வெட்டு நாளாந்தம் அமல்படுத்தப்படுகின்றது.

இதனால், இறுதி நேரத்தில் ஏதாவது மீட்டுப்பார்க்க முயலும் பரீட்சார்த்திகள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து, மனதளவில் பாதிக்கப்படலாம். ஆக, இக்காலப்பகுதியில், பின்னிரவு நேரங்களில் மின்வெட்டை அமல்படுத்தும் வகையிலான தீர்மானங்களை எடுத்திருக்கலாம். அதில் தவறிழைக்கப்பட்டுள்ளது என்பதே எமது அவதானமாகும்.

காலை, பகல் வேளைகளில் தொடர்ச்சியாக இரண்டரை மணிநேரம் மின்வெட்டு அமல்படுத்தப்படுமாயின், கைத்தொழில் துறைகளும், சிறு கைத்தொழில்களும் பாதிக்கப்படும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், அடுத்த தடை தாண்டலுக்கு முகங்கொடுத்திருக்கும் பரீட்சார்த்திகளின் நலனை கவனத்தில் எடுத்து, மின்வெட்டு நேரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கலாம்.

காலை, பகல் வேளைகளில் மின்வெட்டை அமல்படுத்தினால், பரீட்சை மத்தியநிலையங்களில் மின்குமிழ்களை ஒளிரவிடமுடியாது என்றொரு வாதத்தை முன்வைக்கக்கூடும். எனினும், நிறுவப்பட்டுள்ள 2,200 பரீட்சை மத்திய நிலையங்களில் அரைவாசிக்கு மேற்பட்ட நிலையங்களில் மின்சார வசதிகளே இல்லை என்பதே உண்மையாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ "பிள்ளைகளின் எதிர்காலத்தை இருளில் மூழ்கடிக்கும் மின்வெட்டை நிறுத்து" என கோரிக்கைவிடுத்துள்ளார்.

இலட்சக்கணக்கான பரீட்சார்த்திகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமான பரீட்சை என்பதை கவனத்தில் எடுத்து, நல்லதொரு தீர்மானத்தை எடுத்திருக்கலாம் என்பதே எமது வலியுறுத்தலாகும்.


## தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

# அரசியல்வாதிகள் மீட்பர்கள் இல்லை



எம்.எஸ்.எம் ஐயூப்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒத்திவைக்க, அரசாங்கம் இதுவரை எடுத்த சகல முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்தன. அம்முயற்சிகளை நாம், கடந்த வாரக் கட்டுரையில் பட்டியலிட்டோம். ஆனால், அதன் பின்னரும் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும், தேர்தல்களின் போது செலவிடும் பணத்தின் தொகையை கட்டுப்படுத்தும் சட்டம் ஒன்று, வியாழக்கிழமை (19) பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதன்மூலம் இம்முறை, உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஒத்திப்போடப்படலாம் என்பதால், அச்சட்டம் இம்முறை உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக அமலாக்கப்படாது என்றதொரு திருத்தத்துடன் நிறைவேற்றுமாறு எதிர்க்கட்சிகள் கேட்டுக் கொண்டன. ஆனால், அரசாங்கம் அதற்கு இணங்கவில்லை.

அச்சட்டத்தின்படி, கட்சிகளும் வேட்பாளர்களும் எவ்வாறு தேர்தலுக்காக பணம் செலவழிக்கலாம் என்பதைப் பற்றி, தேர்தல் ஆணையகம் விதிமுறைகளை வெளியிட வேண்டும்; அதற்கு பல வாரங்கள் செல்லலாம். அதன் மூலம் தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்பதாலேயே, எதிர்க்கட்சிகள் அவ்வாறு கோரின. ஆனால், அவ்விதிமுறைகள் சில தினங்களில் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையக வட்டாரங்கள் இப்போது தெரிவிக்கின்றன.

இச்சட்டம், தேர்தலைப் பாதிக்காது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். குறித்த விதிமுறைகள் தயாரிக்கப்படவில்லை என்பதற்காக, தேர்தல் ஒத்தி வைக்கப்பட மாட்டாது என்றும் கூறியுள்ளார். ஆனால், எவராயினும் இந்த விடயத்தில் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்தால், நிலைமை என்னவாகும் என்பதை எவராலும் எதிர்வுகூற முடியாது.

தேர்தலுக்கான தடைகள், அத்தோடு முடிவடையவில்லை; தேர்தல் ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்களுக்கு தொலைபேசி மூலம் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதை அரசாங்கம் மறுக்கவில்லை. இதைப் பற்றி விசாரணை நடைபெறும் என்று, பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் இந்த அச்சுறுத்தல்களை விடுத்தவர்கள் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களாயின், அது தொடர்பான விசாரணைகள் தோல்வியிலேயே முடியும். சிலவேளை, விசாரணை ஓரிரு நாள்களில் நின்றுவிடும். முன்னைய காலங்களில், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பல தமிழ் அரசியல்வாதிகள் கொல்லப்பட்ட போது, அவை தொடர்பான விசாரணைகள் எவ்வாறு இழுத்தடிக்கப்பட்டன என்பது இதற்கு உதாரணங்களாகும்.

தேர்தலுக்கு எதிரான அரசாங்கத்தின் சதிகள் மேலும் தொடராவிட்டால், அதேபோல் அச்சதிகள் தொடர்ந்தும் முறியடிக்கப்பட்டால், தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளதைப் போல், தேர்தல் மார்ச் ஒன்பதாம் திகதி நடைபெறும்.

தற்போதைய நிலையில், பல பிரதான குழுக்கள், கூட்டணிகள் இம்முறை வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. ஆளும் கட்சிகளான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசிய கட்சியும் பல இடங்களில் கூட்டாக போட்டியிடுகின்றன. வடக்கில், தமிழ் கட்சிகள் மத்தியில் பல்வேறு முரண்பாடுகள் எழுந்துள்ளன. முஸ்லிம் கட்சிகளும் மலையகக் கட்சிகளும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டாக போட்டியிடுகின்றன.

இந்தத் தேர்தல் மூலம், ஆட்சி மாற்றம் எதுவும் இடம்பெறாததால் 1,000 கோடி ரூபாய் செலவழித்து, இந்தத் தேர்தலை நடத்துவதில் அர்த்தம் இல்லை என்பது, தேர்தலுக்கு எதிராக ஆளும் கட்சிகள் முன்வைக்கும் பிரதான வாதங்களில் ஒன்றாகும். இது முற்றிலும் பிழையான வாதம் எனக் கூற முடியாது.

இந்தத் தேர்தலால் ஆட்சி மாற்றம் இடம்பெறப் போவதில்லைத் தான். ஆனால், அதற்கான அடித்தளம் அமையும் என்பதே பலரது எதிர்பார்ப்பாகும். அரசாங்கமும் அதனாலேயே இந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தலை விரும்பவில்லை.

உண்மையிலேயே, இந்தத் தேர்தல் அரசாங்கத்தைப் பற்றிய கருத்துக் கணிப்பாக மாறலாம். பொருளாதார நெருக்கடியின் காரணமாக, பாரியதொரு மக்கள் எழுச்சி ஏற்பட்டு, நாட்டின் ஜனாதிபதியே நாட்டை விட்டுத் தப்பி ஓடிய நிலையில், மக்கள் கடந்த ஏழு தசாப்தங்களாக வாக்களித்ததைப் போலவே கண்மூடித்தனமாக வாக்களிப்பார்களா இல்லாவிட்டால், தற்போதைய பொருளாதார நெருக்கடி அவர்களது கண்களை திறந்துவிட்டுள்ளதா என்பதையும், இதன் மூலம் பார்த்துக் கொள்ளலாம். எவ்வாறாயினும் தேர்தல் முடிவுகள், அரசாங்கத்துக்கு மிக இறுக்கமான செய்தியை வழங்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

சிறந்ததொரு நாட்டைக் கட்டி எழுப்புவதற்கான அடித்தளத்தை, இந்தத் தேர்தலின் மூலம் இட்டுக் கொள்ளும் பொறுப்பு, மக்களிடமே இருக்கிறது. ஒரு சில சிறிய கட்சிகளைச் சேர்ந்தவர்களைத் தவிர, ஏனைய அரசியல்வாதிகளுக்கு அது தேவையற்ற விடயமாகும். அவர்களுக்கு வேண்டியதெல்லாம், தேர்தல்கள் மூலம் பட்டம், பதவிகளைப் பெற்று, அவற்றுக்கான அதிகாரத்தை பாவித்து, மக்களின் பணத்தை கோடிக் கணக்கில் சூறையாடுவதேயாகும்.

அவர்களது உலகமே வேறு என்பதை, நாட்டு மக்களில் பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது. சாதாரண மக்களுக்கு ஆயிரம் ரூபாய் பெரிய தொகையாக இருந்தாலும், அவர்களது உலகில் ஆயிரங்கள், இலட்சங்கள் இல்லை, அதில் புழக்கத்தில் உள்ளவை; கோடிகளும் கோடானு கோடிகளுமாகும்.

எனவே, இந்த ஊழல் நிறைந்த சமூக அமைப்பைப் பாதுகாக்கும் வகையிலேயே அவர்கள் செயற்படுவர். தேர்தல்களின் போது, தம்மைப் போன்ற ஊழல் பேர்வழிகளையே தமது கட்சியின் சார்பில் வேட்பாளர்களாக நிறுத்துவர். ஒரு சில விதிவிலக்குகள் இல்லாமலும் இல்லை. எனவே தான், சிறந்ததொரு நாட்டை உருவாக்கிக் கொள்ளும் பொறுப்பு, மக்களின் கைகளிலேயே இருக்கிறது என்கிறோம்.

சிறந்த நேர்மையான வேட்பாளர்களை தெரிவு செய்ய, அரசியல் கட்சிகளைத் தூண்டுவதற்காக சில தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் ஒன்றிணைந்து, 2015ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் திகதி ஓர் அமைப்பை உருவாக்கின. அதற்கு 'மார்ச் 12 அமைப்பு' என்று பெயரிட்டனர்.

இந்த அமைப்பு சகல கட்சிகளையும் அணுகி, இந்த விடயத்தில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டது. 'மார்ச் 12 பிரகடனம்' என்ற அந்த இணக்கப்பாட்டில், அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் கையொப்பமிட்டனர். ஆனால், அதே ஆண்டு வந்த பொதுத் தேர்தலின் போது, சில கட்சிகள் கொலை குற்றத்துக்காக விளக்கமறியலில் உள்ளவர்களையும் வேட்பாளர்களாக நிறுத்தின.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி, அந்த ஆவணத்தைத் தயாரிக்க முன்னர் இடம்பெற்றதாயினும், அம்மோசடியை நியாயப்படுத்தியவர்கள் பலர் ஐ.தே.க சார்பில் அந்தப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் பல ஆயிரம் கோடி ரூபாய் மோசடி செய்தவர்களும் அத்தேர்தலிலும் அதன் பின்னரும் தொடர்ந்து போட்டியிடுகின்றனர். எனவே, திருடர்களிடம் திருட்டுக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்ப்பார்க்க முடியாது. மக்கள் தான் தமது தலைவிதியை தம் கையில் எடுக்க வேண்டும்.

நாடு இன்று பொருளாதார ரீதியாக பாதாளத்திலேயே இருக்கிறது. இந்த நிலைமை மேலும் மோசமாகும் அறிகுறிகளே தென்படுகிறது. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்தால், நாட்டில் சகல பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்பதைப் போல் தான் கூறி வருகிறது. ஆனால் அந்தக் கடனும் அத்தோடு அந்நிதியின் உதவியில் கடந்த காலங்களில் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடித்துக் கொள்ளும் வாய்ப்பும் மட்டுமே கிடைக்கக் கூடிய நன்மைகளாகும்.

அந்த வாய்ப்பை பயன்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு அரசாங்கத்தையே சாரும். ஆனால், அரசாங்கத்திடம் அதற்கான திட்டமொன்று இருப்பதாக தெரியவில்லை. அதனால் தான் இதற்கு முன்னர் இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் 16 முறை உதவி பெற்றும் நாடு தொடர்ந்தும் பாதாளத்தை நோக்கியே சென்றது.

இது தாமாக நடந்ததொன்றல்ல. இது நாட்டை ஆட்சி செய்தவர்களின் கொள்கைகளினதும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பாரிய ஊழல்களினதும் விளைவாகும். பொருளாதாரம் இந்தளவுக்கு சீரழிந்தும் அரசியல்வாதிகள் மக்கள் பணத்தை சூறையாடுவதை நிறுத்தத் தயாரில்லை. இரசாயன உரத் தடையால் நாட்டின் விவசாயம் அழிந்த போதும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இந்தியாவிலிருந்து திரவ உரத்தை இறக்குமதி செய்து கோடிக் கணக்கில் சம்பாதித்தனர். பொருளாதாரம் மிக மோசமான நிலையில் இருந்த போது தான், சீனி இறக்குமதியால் வியாபாரிகள் 1,500 கோடி ரூபாய் வரிப் பணத்தை கொள்ளையடித்துக் கொள்ளும் வகையில் அரசியல்வாதிகள் முடிவுகளை எடுத்தனர். கடந்த வாரமும் மேலும் இரண்டு அமைச்சர்களை நியமித்தனர். இந்தியாவிடம் உதவி பெறுவதற்காக இனப்பிரச்சினையை பாவிக்கிறார்கள்.

எனவே, மக்கள் தமது அரசியல் பொருளாதார தலைவிதியை தாமே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளை மீட்பர்களாக கருதும் மனப்பான்மை மக்களிடம் இருக்கும் வரை, அவர்களுக்கு விமோசனம் கிடைக்காது. நான்கு வருடத்துக்கோ ஐந்து வருடத்துக்கோ ஒருமுறை வரும் தேர்தலின் போது மக்கள் சிந்தித்து செயலாற்றினால் போதுமாகும்.

பரம்பரையாக இந்தக் கட்சிக்குத் தான் வாக்களித்தோம் என்றோ, இந்த வேட்பாளர் எமது இனத்தை, மதத்தை, சாதியை சேர்ந்தவர் என்றோ, இந்தக் கட்சித் தான் எனது மகனுக்கு தொழில் வழங்கியது என்றோ, இவரைப் பிடித்துக் கொண்டால் தொழிலொன்றை பெற்றுக் கொள்ளலாம் என்றோ தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகள் வழங்கும் சாப்பாட்டுப் பார்சல் அல்லது சாராயப் போத்தலுக்கோ தான் இதுகாலவரை மக்களில் பெரும்பாலானோர் வாக்களித்தனர். இந்தக் கொள்கையால் தான், நாம் இன்று இந்த நிலையில் உள்ளோம் என்று உணரும் தருணம் வந்துவிட்டது.



## வாழ்வியல் தரிசனம்

அழகு எனும் விடயத்தில் சில அம்சங்கள் அடங்கியுள்ளன. அழகு என்பது உடல்சார்ந்த அழகுமட்டுமல்ல; கல்வி அழகு, பிறர்சினேக அழகு, பேச்சில் அழகு, பழகும் முறையில் அழகு, நாகரிகம்-கலைநயம் என்பவற்றிலும் அழகு அடங்கியுள்ளது.

எல்லாவற்றிலும் ஒழுக்மே பேரழகு. ஒழுக்கத்தை ஒருவன் நிராகரித்தால், அவனை அரக்கர்களின் சாயல் உள்ளவனாக உலகம் நோக்கும்.

சகலரும் விரும்பும் வண்ணம் வாழவேண்டும். அன்புடன், அமைதியுடன் உரையாற்ற வேண்டும். ஆணவம் தீயது; எவரது மனமும் நோகாதவாறு செயலாற்ற வேண்டும்.

முகத்தின் அழகை நாங்கள் இரசிப்பதுண்டு. என்றும் முகமலர்ச்சியுடன் இருப்பதுதான் அழகு. அழகு இருந்தும் புன்னகை புரியாதவர்கள், வார்த்தைகளால் கெட்டவைகளைப் பேசுபவர்கள் போன்றவர்கள், தங்கள் அழகைத் துன்புறுத்தி விடுகின்றார்கள்.

நேரிய நெஞ்சினூடாக வரும் மலர்ச்சி, எங்களுடன் வருகின்றது. கலைகளில் பலபிரிவுகள் உண்டு. நடனம், நாடகம், சங்கீதம், நடிப்பு எனப் பலதும் அழகியலுடன் இணைந்தவை. யாவருடனும் பேரன்புடன் நடந்து கொள்பவர்கள், மக்களுடன் வாழும் தெய்வங்களுக்கு நிகராகின்றனர்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கந்தளாயில் குரங்குகளின் தொல்லை

### கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபைக்கு உட்பட்ட பேராறு, பேராற்று வெளி அணைக்கட்டு, மூன்றாம் கொலனி, மத்ரஸா நகர், ரஜ எல, வாத்தியகம போன்ற பிரதேசங்களில் குரங்குகளின் தொல்லை காரணமாக, அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

கிராமங்களுக்குள் புகும் காட்டுக் குரங்குகள், வீட்டில் வைக்கின்ற பொருட்களை தூக்கிச் சென்றுவிடுவதாகவும் 100க்கும் மேற்பட்ட குரங்குகள் வயல்களுக்குள் புகுந்து, வேளாண்மை பயிர்களை சேதப்படுத்துவதோடு பிடுங்கிச் செல்வதாகவும் பாதிக்கப்படும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

காலையில் கிராமங்களுக்குள் புகும் குரங்குகள், மாலை வரை மக்களுக்கு தொல்லை கொடுப்பதாகவும் தென்னை மரங்களில் உள்ள குரும்பைகள் அனைத்தையும் குரங்குகள் சாப்பிடுவதுடன் அவற்றையும் சேதப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஆள் நடமாட்டம் இல்லாத நேரம் பார்த்து, வீட்டுக்குள் புகுந்து சமைத்த உணவுகளை கூட விட்டுவைப்பதில்லை எனவும் வாழைமரம், மாமரம் என ஒன்றையும் விட்டு வைப்பதில்லை எனவும் பொதுமக்கள் மிகுந்த அசௌகரியத்தை இந்தக் குரங்குகளால் அனுபவிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, குரங்குகளின் தொல்லைகளில் இருந்து பாதுகாத்து தருமாறு அப்பகுதியில் வசிக்கும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எப். முபாரக்

# அமைச்சரவை தீர்மானங்கள் சில...




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில..

### 1] e-license முறைமையை அறிமுகப்படுத்தல்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், பொதுவாக ஒரு வருடத்தில் 17,000 அனுமதிப்பத்திரங்களை வழங்குவதுடன், குறித்த செயன்முறை குறைந்தபட்ச தொழில்நுட்பத்துடனும் அதிகபட்ச மனித வளத்துடனும் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வனுமதிப்பத்திரங்கள் வழங்குகின்ற செயன்முறையை மிகவும் வினைத்திறனாகவும், குறைந்தளவு மனித வளத்துடனும் நடைமுறைப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை சுங்கத் திணைக்களம், மதுவரித் திணைக்களம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை முதலீட்டுச் சபை, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, இலங்கை கட்டளைகள் நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான செயன்முறைக்குக் குறித்த ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின் பங்குபற்றலுடன் அச்செயன்முறையை தானியக்க முறையில் மேற்கொள்ளக் கூடியவாறு வெளிப்படைத்தன்மையையும் வினைத்திறனையும் அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்காக ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் ஏற்புடைய தேச எல்லைகள் பாதுகாப்புப் பணியகம் (EXBS வேலைத்திட்டம்) இனால் நன்கொடையாக 280,000 அமெரிக்க டொலர் பெறுமதியான STRATLINK தகவல் தொழில்நுட்ப செயல்நிரலாக்கத்தின் முழுமையான மொழி மூலக் குறியீட்டுடன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 'இ-அனுமதிப்பத்திரம்' நிகழ்ச்சித்திட்டத்தை துரிதமாக மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 02. சேவை வழங்கல் மையக் கருத்திட்டம்

இலங்கையின் பெரிய துறைமுகமான கொழும்பு துறைமுகம் தெற்காசிய வலயத்தில் முக்கிய கேந்திரமயமான துறைமுகமாகும். கொழும்பு நகரை துறைமுக சேவைகள் வழங்கல் கேந்திர நிலையமாக மாற்றுதல், இலங்கை துறைமுக அதிகார சபையின் தேசிய துறைமுகங்கள் திட்டத்தின் அடிப்படை மூலோபாய நோக்கமாகும்.

கொழும்பு தெற்குத் துறைமுகத்திற்குச் சொந்தமான பட்டர்ன்பேர்க் பிரதேசம், ப்ளூமென்டல் பிரதேசம் போன்ற சேவை வழங்கும் பிரதேசங்களை அரச-தனியார் பங்குடமையின் கீழ் அபிவிருத்தி செய்யக்கூடிய பிரதேசங்களாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, 150 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைய (CICT) கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவொன்று அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டத்தை சைனா மேர்ச்சன்ட் போர்ட் (CM Port) கம்பனி, கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைய (CICT) ) கம்பனி, இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் இடையில் அரச-தனியார் பங்குடமைக் கருத்திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 03. பாதுகாப்பு தினத்தை பிரகடனப்படுத்தல்

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடமைகளையும் எடுத்துக் கூறுவதற்கும், அத்தகைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான அமைப்புமுறையொன்றை உருவாக்குவதற்காக 2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதற்கமைய, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் அன்றாடம் அதிகரித்து வருகின்ற குற்றங்களால் பாதிக்கப்படுகின்ற பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்ட நபர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பதற்காக சமூகத்தைத் விழிப்புணர்வூட்டும் நோக்கில் அதுதொடர்பாக அரசி நிறுவனங்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களை கூருணர்வு மிக்கதாக்கும் நோக்கில் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பு தினமொன்றைப் பிரகடனப்படுத்துதல் பொருத்தமானதென அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2015 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தினமான மார்ச் 07 ஆம் திகதி 'குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பு தினம்' ஆக பிரகடனப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 04. சிறிஞ்சர்கள் வழங்கலுக்கான பெறுகை

இதய நோயாளர்களின் சிகிச்சைகளுக்காகப் பயன்படுத்தப்படும் 800,000 எனொக்ஸபாரின் சோடியம் ஊசிமருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக இந்திய உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகத்தர்களிடம் வரையறுக்கப்பட்ட போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 4 விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, பெறுகை மேன்முறையீட்டு சபை மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் குறித்த பெறுகையை M/s Brawn Laboratories Ltd. கம்பனிக்கு வழங்குவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 05. பாராளுமன்ற சட்டத்தை அறிமுகப்படுத்தல்

அனைத்துப் பிரஜைகளுக்கும் பொருளாதார, சமூக, கலாசாரம், அரசியல் துறைகளில் சமமான வாய்ப்புகளை உருவாக்கல், தனித்துவத்தைப் பேணல், பன்மைத்துவத்தைப் பாராட்டுகின்றதும் மதிப்பளிக்கின்றதுமான சமூகத்தை உருவாக்குதல் மற்றும் அனைத்து சமூகங்களும் ஒற்றுமையுடனும் ஒத்துழைப்புடனும் சேர்ந்து வாழக்கூடிய சமூகமொன்றை உருவாக்கும் நோக்கில் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகம் (ONUR) தாபிக்கப்பட்டுள்ளது.

குறித்த செயலகத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தொடர்பில் கவனம் செலுத்துகையில், அதன் தொழிற்பாடுகளை விரிவாக்கம் செய்வதற்கு சட்டமொன்றின் மூலம் குறித்த செயலகத்தை நிரந்தர நிறுவனமாக தாபிப்பது பொருத்தமானதென அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, அதற்கான சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 06. சர்வதேச உடன்படிக்கை

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மற்றும் சவூதி அரேபிய இராச்சியத்துக்கும் இடையிலான வருமானம் ஈட்டுகை அடிப்படையிலான இரட்டை வரிவிதிப்பைத் தவிர்த்தல் மற்றும் அரசின் நிதித்தடுத்தல் தொடர்பிலான சர்வதேச உடன்படிக்கைக்கு அதிகாரிகள் மட்டத்திலான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் 75(3) ஆம் உறுப்புரையின் கீழ் குறித்த உடன்படிக்கை சரியான வகையில் பூரணப்படுத்தப்பட்டுள்ளமையை சட்டமா அதிபர் உறுதிப்படுத்தியுள்ளதுடன், குறித்த உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு வெளிவிவகார அமைச்சு உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, குறித்த உடன்படிக்கையில் இராஜதந்திர மட்டத்தில் கையொப்பமிடுவதற்கும், பின்னர் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 75(1) உறுப்புரையின் கீழ் குறித்த உடன்படிக்கையின் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 7. பிரச்சினைகளுக்கான தீர்வு

வனப்பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு பாதுகாப்புத் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழுள்ள வனாந்தரங்களில் நீண்டகாலமாக வசித்துவருகின்ற அல்லது விவசாய நடவடிக்கைகளுக்காக தொடர்ந்திருக்கின்ற மக்களுடைய பிரச்சினைகள் பல வருடங்களாக கலந்துரையாடப்பட்டு வருவதுடன், அதற்கான நிரந்தரத் தீர்வுகள் இதுவரை வழங்கப்படவில்லை.

குறித்த பிரச்சினைகள் இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் பொதுவாக நிலவுகின்ற பிரச்சினையாவதுடன், ஆரம்பக் கட்டமாக வனாந்தரங்கள் அதிகமாகக் காணப்படும் மற்றும் யுத்தம் நிலவிய பகுதிகளில் அதாவது, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை போன்ற மாவட்டங்களில் இவ்வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த யோசனைக்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# திருமணம் குறித்து மனம் திறந்தார் ராகுல்



“அன்பான, புத்திசாலியான பெண் கிடைத்தால் திருமணம் செய்து கொள்ளத் தயாராக இருக்கிறேன்” என காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், வயநாடு தொகுதி எம்.பியுமான ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஊடகமொன்றுக்கு அவர் அளித்த செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் “என்னைத் திருமணம் செய்து கொள்ளும் பெண், எனது தாயார் சோனியா மற்றும் பாட்டி இந்திராவின் குணநலன்களைக் கொண்டிருக்க வேண்டும்” எனவும் தெரிவித்துள்ளார்.

புது டெல்லி

## பலூன்கள் பறப்பதற்குத் தடை



இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு நாளை 26ஆம் திகதி புதுடெல்லியில் பிரமாண்ட அணிவகுப்புடன் கோலாகலக் கொண்டாட்டம் நடைபெறவுள்ளது.

அதற்காக பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, புதுடெல்லியில் டிரோன்கள் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து புதுடெல்லி பொலிஸார் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் 'குடியரசு தின கொண்டாட்டத்தை சீர்குலைக்க சமூக விரோத சக்திகளும் பயங்கரவாதிகளும் இந்தியாவுக்கு எதிரானவர்களும் டிரோன்கள், பாராகிளைடர்கள், ஆளில்லாத குட்டி விமானங்கள் ஆகியவற்றை பறக்கவிட்டு பொதுமக்களுக்கும், தலைவர்களுக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடும்.

இதைக்கருத்தில் கொண்டு, புதுடெல்லி வான்பகுதியில் டிரோன்கள், பாராகிளைடர்கள், ஆளில்லாத குட்டி விமானங்கள், பாரா மோட்டார்கள், ஏர் பலூன்கள் ஆகியவற்றைப் பறக்கவிடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தடையானது வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி வரை அமலில் இருக்கும்.

தடையை மீறி, யாராவது இப்பொருட்களைப் பறக்கவிட்டால், இந்திய தண்டனை சட்டத்தின் 188ஆவது பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராஜஸ்தான்

## அரச வேலைக்காக குழந்தையை கால்வாயில் வீசிய தம்பதி



நபர் ஒருவர் அரச வேலை வாய்ப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக தனது குழந்தையைக் கால்வாயில் வீசிச்சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தானில் அரச துறையில் ஒப்பந்த ஊழியராகப் பணியாற்றி வருபவர் ஜவர்லால் மேக்வால். 36 வயதான இவருக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளநிலையில், அவரது மனைவி மீண்டும் கர்ப்பம் தரித்துள்ளார்.

அம்மாநிலத்தில் மூன்றாவது குழந்தை பிறந்தவுடன் அரச ஊழியர்கள் கட்டாயமாக ஓய்வு பெறவேண்டும் என்ற சட்டம் அமலில் உள்ளதால், அந்நபர், தனது நிரந்தர வேலையை இழந்துவிடுவோமோ? என்ற அச்சத்தில் கடந்த 22 ஆம் திகதி தனது 5 மாத பெண் குழந்தையை அப்பகுதியில் உள்ள கால்வாயில் வீசிச் சென்றுள்ளார். இதற்கு அவரது மனைவியும் உடந்தையாக இருந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் குறித்த குழந்தையும் சம்பவ இடத்திலேயே உயிரழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த தம்பதியினரைக் கைது செய்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாகப்பட்டினம்

## வாய்ப்புக் கிடைக்காததால் உயிரை மாய்த்த பிரபல நடிகர்



பிரபல தெலுங்கு நடிகரான சுதீர் வர்மா நேற்று (24) காலை விசாகப்பட்டினத்தில் உள்ள தனது வீட்டில் வைத்து, தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

அவரது மரணமானது ரசிகர்கள் மற்றும் தெலுங்குத் திரையுலகினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

33 வயதான சுதீர் வர்மா 'குண்டனபு பொம்மா', 'நீக்கு நாகு டேஷ் டாஷ்', 'செகண்ட் ஹேண்ட்' போன்ற படங்களில் நடித்து பிரபலமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொலிஸாரின் விசாரணையில் அவர் “திரைப்பட வாய்ப்பு கிடைக்காததால் அண்மைக்காலமாக மிகுந்த மனஉளைச்சலில் இருந்துள்ளார்” எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் அவரது ரசிகர்களும், திரையுலக நட்சத்திரங்களும் அவரது குடும்பத்தினருக்கு தமது இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

கேரளா

## அச்சமூட்டும் 'நோரோ'


கேரளாவில் சுமார் 19 சிறார்களுக்கு நோரோ (Norovirus)வைரஸ் பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக ஏற்படும் இவ் வைரஸ் தாக்கத்தால் வயிற்று வலி, காய்ச்சல், தலைவலி, உடல்வலி ஆகியவை உண்டாகலாம் எனவும், தாக்கம் அதிகமாக இருந்தால், உடலில் நீரிழப்பு ஏற்படும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பொதுவாக ஆரோக்கியமானவர்களுக்கு இத் தொற்று ஏற்பட்டாலும் சிறு குழந்தைகள், வயதானவர்கள் இதன் இணை நோய்களால் தீவிரமாக பாதிக்கப்படலாம் எனவும், கழிவுநீர் மூலம் நோரோ வைரஸ் பரவக்கூடும் என்பதால் வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு போன்றவை இதன் முதல் அறிகுறிகள் என்றும் மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

**“ ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக ஏற்படும் இவ் வைரஸ் தாக்கத்தால் வயிற்று வலி, காய்ச்சல், தலைவலி, உடல்வலி ஆகியவை உண்டாகலாம்**

அத்துடன் தொற்றுக்கு ஆளானவர்கள் மற்றவர்களுடன் தொடர்பைத் தவிர்த்துக் கொள்ளும்படியும், கைகளை அடிக்கடி சவர்க்காரமிட்டு கழுவ வேண்டும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



புதுடெல்லி

## பணிப்பெண்ணிடம் அத்துமீறல்

### விமானத்திலிருந்து இறக்கிவிடப்பட்ட பயணி



விமானப் பணிப் பெண்ணிடம் அநாகரீகமாக நடந்து கொண்டதாகக் கூறி, பயணி ஒருவர் விமானத்தில் இருந்து இறக்கிவிடப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுடெல்லியில் இருந்து ஐதராபாத் நோக்கிப் பயணித்த 'ஸ்பைஸ்ஜெட்' விமானத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று, விமானம் புறப்படத் தயாராக இருந்த போது விமானப் பணிப்பெண் ஒருவரை, முதியவர் ஒருவர் தொட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இதனால் கோபமடைந்த அப் பணிப்பெண், சம்பந்தப்பட்ட நபரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நிலையில் அந்த நபரும் அப்பெண்ணுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது தனது கை வேண்டுமென்றே படவில்லை என்றும், இடம் சின்னதாக இருந்ததால் கை தெரியாமல் பட்டுவிட்டதாகவும் அவர் விளக்கம் அளித்துள்ளார்.

எனினும் தொடர்ந்து வாக்குவாதம் நீடிக்கவே, மற்ற பயணிகளும், விமான ஊழியர்களும் அங்கு வந்து அவர்களைச் சமாதானப்படுத்தி விலக்கிவிட்டனர் எனவும், அதன் பின்னர் குறித்த நபர் மன்னிப்புக் கடிதம் கொடுத்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இருந்தபோதிலும், அவரையும், அவருடன் வந்த மற்றொரு பயணியையும் விமான ஊழியர்கள் இறக்கிவிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

# துப்பாக்கி முனையில் 'அமெரிக்கா'

அமெரிக்காவில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.


குறிப்பாக கடந்த 22 ஆம் திகதி அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இடம்பெற்ற சீனப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில், மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 10 பேர் உயிரிழந்ததோடு 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் ஏற்படுத்திய அதிர்வலைகள் அடங்குவதற்குள்ளேயே மேலும் 3 இடங்களில் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் அயோவாவிலுள்ள, பாடசாலையில் நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 2 மாணவர்கள் உயிரிழந்ததோடு, மூவர் படுகாயமடைந்தனர்.

இதேபோல் கலிஃபோர்னியா மாகாணத்தில் இருவேறு பண்ணைகளில் நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் சீன தொழிலாளர்கள் 7 பேர் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு




நடத்திய ஜாவோ சுன்லி என்ற முதியவரைக் கைது செய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்காவில் கடந்தாண்டு மாத்திரம் சுமார் 647 துப்பாக்கிச்சூடு சம்பவம் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான்

## பெண் பொம்மைகளுக்கு வந்த சோதனை

2021 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதிலிருந்து அங்கு பல்வேறு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர்.

குறிப்பாக பெண்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் விதமாக, ஆண்களின் துணையின்றி பெண்கள் வெளியே செல்வதற்கும், உடற்பயிற்சி நிலையங்கள், பூங்காவுக்குச் செல்வதற்கும், உயர்கல்வி கற்பதற்கும், விளம்பரங்களில் நடிப்பதற்கும், தொலைக்காட்சிகளில் தோன்றுவதற்கும் தலிப்பான் அரசு தடைவிதித்திருந்து.

அது மட்டுமில்லாது, ஆடையகங்களில் உள்ள பெண் பொம்மைகளின் முகங்களை மறைக்குமாறு தலிபான்கள் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஆடையங்களில் உள்ள முகம் மறைக்கப்பட்ட பொம்மைகளின் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.



அமெரிக்கா


## வாதாட வருகின்றது 'லோயர்'

மனிதனுக்காக நீதிமன்றத்தில் வாதாட போகும் உலகின் முதல் ரோபோ என்ற பெருமையை 'லோயர்' பெற்றுள்ளது.

ஸ்டார்ட் அப் என்ற பிரபல தொழில் நுட்ப நிறுவனமே குறித்த ரோபோவை உருவாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந் நிறுவனத்தை ஜோஷ்வா ப்ரோடர் என்பவர் 2015 ஆம் ஆண்டு நிறுவினார்.

இந்நிலையில் தற்போது இந்த நிறுவனம் உலகின் முதல் ரோபோ வழக்கறிஞரை அறிமுகப்படுத்தியுள்ளது.

தாமதமாக அபராதம் செலுத்துபவர்களுக்கு உதவவே இந்த ரோபோ உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு பயிற்சி அளிக்க நீண்ட காலம் எடுத்துக் கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.




அமெரிக்கா

## இப்படியும் ஒரு உலக சாதனை

அமெரிக்காவைச் சேர்ந்த சீயோன் கிளார்க் என்ற இளைஞர் கைகளால் வேகமாக நடந்து உலக சாதனை படைத்துள்ளார்.

பிறக்கும்போதே இரண்டு கால்கள் இல்லாமல் பிறந்த கிளார்க், கைகளால் வேகமாக நடக்கும் பயிற்சியை மேற்கொண்டு, தனது விடாமுயற்சியால் 20 மீற்றர் தூரத்தை 4.78 செக்கன்களில் கடந்து, கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

இந்நிலையில் சீயோன் கிளார்க்கின், உலக சாதனை வீடியோவை கின்னஸ் நிறுவனம் அண்மையில் வெளியிட்டுள்ள நிலையில், அது இணையத்தில் வைரலாகி வருகின்றது.



அமெரிக்கா

## நிலவில் கால்வைத்தவர் 93 வயதில் கரம் பிடித்தார்

1969 ஆம் ஆண்டு அப்பல்லோ 11 விண்கலம் மூலம் நிலவுக்கு பயணித்து, அதில் கால் பதித்த முதல் மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்களில் ஒருவர் பஸ் ஆல்ட்ரின்.

இவர் தனது 93ஆவது பிறந்தநாளை அண்மையில் கொண்டாடிய நிலையில், அன்றே தனது நீண்ட நாள் காதலியையும் கரம்பிடித்துள்ளார்.

இந்நிலையில் தனது மனைவி அன்கா ஃபௌருடன் இருக்கும் புகைப்படங்களை டுவிட்டரில் பதிவிட்டுள்ள ஆல்ட்ரின், "நாங்கள் இருவரும் திருமணம் செய்துகொண்டோம் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

லொஸ் ஏஞ்சல்ஸில் நாங்கள் இருவரும் எளிய முறையில் திருமணம் செய்துகொண்டோம். ஓடிப்போகும் வாலிபர்களைப் போல உற்சாகமாக இருக்கின்றோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

பஸ் ஆல்ட்ரின் மூன்று முறை திருமணமாகி விவாகரத்து பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## ஸ்போர்டிஃபை அதிரடி; அதிர்ச்சியில் மக்கள்

அண்மைக்காலமாக வருவாயை அதிகரிக்கும் நோக்கில் உலகின் முன்னணி நிறுவனங்களான டுவிட்டர், மெட்டா, அமேசான், கூகுள், மைக்ரோ சொப்ட் ஆகிய நிறுவனங்கள் தங்களது ஊழியர்களைப் பணிநீக்கம் செய்து வருகின்றன.

அந்த வரிசையில் தற்போது பிரபல மியூசிக் ஸ்ட்ரீமிங் தளமான ஸ்போடிஃபையும் (Spotify) இணைந்துள்ளது.

ஸ்போடிஃபை நிறுவனமானது உலகம்




முழுவதும் உள்ள தனது ஊழியர்களில் 6 சதவீதம் பேரை அதாவது 10,600 பேரை பணிநீக்கம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

இதனிடையே, பணி நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கான தொகுப்பூதியம், மருத்துவ காப்பீடு உள்ளிட்டவையும் வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில் ஸ்போடிஃபை, மைக்ரோசொப்ட், கூகுள், ஆகிய நிறுவனங்கள் அடுத்தடுத்து இவ்வாறான ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை தொழில் நுட்பத் துறையில் பணிபுரிபவர்கள் மத்தியில் மிகுந்த கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.



இத்தாலிய சீரி ஏ தொடர்:

# எம்போலியிடம் தோற்ற இன்டர் மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற எம்போலியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் இன்டர் மிலன் தோற்றது.

அந்தவகையில், சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 50 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி காணப்படுகின்றது. நடப்புச் சம்பியன்களான ஏ.சி மிலன் 38 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், 37 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் இன்டர் மிலனும், அதே புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் நான்காமிடத்தில் றோமாவும் காணப்படுகின்றன.

## பதவி நீக்கப்பட்ட எவெர்ற்றன் முகாமையாளர்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான எவெர்ற்றனானது, தமது முகாமையாளர் பிராங்க் லம்பார்ட்டை நியமித்து ஓராண்டுக்குள் பதவி நீக்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டுடனான போட்டியில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து கடந்த 12 போட்டிகளில் ஒன்பதாவது தோல்வியை எவெர்ற்றன் பதிவு செய்ததைத் தொடர்ந்தே லம்பார்ட் பதவி நீக்கப்பட்டுள்ளார்.

கடந்தாண்டு ஜனவரி மாதத்தில் ரஃபேல் பெனிட்ஸை பிரதியிட்டு 16ஆவது இடத்தில் அப்போது பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் இருந்த எவெர்ற்றன் தரமிறக்கப்படுவதை லம்பார்ட் தடுத்தபோதும், தற்போது 20 போட்டிகள் முடிவில் 15 புள்ளிகளுடன் 19ஆவது இடத்தில் எவெர்ற்றன் காணப்படுகின்றது.

இந்நிலையில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான லீட்ஸ் யுனைட்டெட்டின் முன்னாள் முகாமையாளரான மார்செலோ பியெஸ்லா, லம்பார்ட்டை பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.





## டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முகாமையாளராக சரி?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முகாமையாளரான அந்தோனியோ கொன்டேயை கழகத்திலிருந்து நீக்கினால், இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலியின் முகாமையாளரான மௌரிசியோ சரியை நியமிப்பது குறித்து அக்கழகம் ஆராய்கிறது.

இதேவேளை இன்னொரு பிறீமியர் லீக் கழகமான வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் முகாமையாளரான டேவிட் மொய்ஸை அக்கழகம் பதவி நீக்கினாலும் அவரைப் பிரதியிடவும் சரி ஆராயப்படுகிறார்.

கந்தளாய் நியூ சண்றைஸ் விளையாட்டுக் கழகத்துக்கு

## விளையாட்டுப் பொருட்கள் அன்பளிப்பு

எப். முபாரக்

கந்தளாய் நியூ சண்றைஸ் விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் மஸாஹிம் அவர்களின் கேரிக்கைக்கமைவாக, கழக அங்கத்தவரான எச்.எம். றியாழ்தீனால் கழக வீரர்களுக்கு 70,000 ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கழக வீரர்கள், பேராத்துவெளி மாகா வித்தியாலயத்தின் மாணவர்கள் இதனூடாக பலன்களைப் பெறுகின்றனர். இவ்வாறான உதவிகளை கடந்த காலங்களிலும் பேராற்றுவெளி பிரதேசத்தில் இவருடாக செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 25 ஜனவரி 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.